716

# குமரிமலர்

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

விலை அணா 8

மலர் 12 இதழ் 3


மன்மத - ஆனி

# உள்ளுறை

பக்கம்

1. கம்பரும் ஆழ்வார்களும்
—கி. பக்ஷிராஜன் 2
2. எதை எழுத?
—"நெடியோன்" 17
3. போலீஸ்-பொதுஜனத் தொடர்பு 21
4. ஸ்ரீ தியாகராஜர்
—ஸ்ரீ கே. வாசுதேவ சாஸ்திரியார் 28
5. பிரிட்டனில் அவசரச் சட்டப் பிரகடனம் 36
6. சித்திரகூடம் செல்வதும்
மன்னனின் மறைவும்
—சு. ராஜகோபாலன் 40
7. வெள்ளக் கட்டுப்பாடு 58
8. செய்திக் கோவை 64
9. அமெரிக்காவில் சமயப் பற்று 78

சுவர்ண மாளிகை



P.A. ராஜு செட்டியார் & பிரதர்
கோயமுத்தூர்

P-1-49

# கம்பரும் ஆழ்வார்களும்

கி. பாஷிராஜன்

தமிழிலக்கிய பரம்பரையில் கம்பரது இராமாயணத்திற்கும், தமிழ்ப் புலவர் தொகுதியிலே கம்பருக்கும் ஒப்பும் உயர்வும் இல்லை யென்பது முன்னைய தமிழறிஞர்களும் தற்காலத் தமிழாராய்ச்சியாளரும் ஒருமிடருக வெளியிட்ட உண்மைகள். முன்னையோர், 'கல்வியில் பெரியன்' என்று கம்பரைப் போற்றினர்கள். கல்வி என்பது கேள்வியையும் இலக்கணையால் தன்னுள்ளடக்கும்.

கம்பரது இராமாயணத்தின் ஆறு காண்டங்களையும் துயர்ந்து பன்முறை கற்றேர் பண்டைய தமிழ் வடமொழி இலக்கியங்களுக்குக் கம்பர் மிகவும் கடமைப்பட்டுள்ளார் என்பதை எளிதில் உணர்வர். உணர்ந்தும் இருக்கிருர்கள்.

இலக்கியங்கள் மட்டுமின்றிச் சமய நூல்களுக்கும் கம்பர் கடமைப்பட்டுள்ளார். இவ்வுண்மை சமய நூல்களையும் கம்பரது இராமாயணத்தையும் ஒருங்கே நோக்குவார்க்கு இனிது புலனுகக் கூடியது. கம்பரது காலம் ஒன்பதாம் நூற்ருண்டு என்றும் பன்னிரண்டாம் நூற்ருண்டு என்றும் இருவகையாகக் கூறப் பெறுகின்றது. அது எப்படியாயினும் அவரது இராமாயணம் தமிழிலக்கியத்தில் சமய காலம் அல்லது பிரபந்த காலம் என்று கூறப்படும் ஆழ்வார்கள் நாயன்மார்கள் காலத்துக்குப் பிற்பட்டது தான் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவே தமிழ் நாட்டில் தொன்றுதொட்டுப் பேணி வளர்க்கப்பட்ட வைணவ, சைவ சமயங்கள் இடையில் சில காலம்


அருணகிரிவிலாஸ்
சீயக்காய் பவுடர்
N. ஆறுமுகம் பிள்ளை.
காரைக்குடி.
B.S

சமண பௌத்த இருள் மேகங்களால் மறைக்கப்பட்டு ஆழ்வார்கள் நாயன்மார்கள் இவர்களது அருள் வாக்குக்களால் அவ்விருள் மேகம் சிதறடிக்கப்பட்டு மீண்டும் ஒளி வீசத் தொடங்கியபொழுதோ, அன்றி அவ்விரு சமயச் சுடர்களும் சற்று ஒளி முதிர்ந்த காலத்திலேயோ கம்பர் வாழ்ந்தார் என்பது தெளிவு.

கம்பர் தம் நூலைக் கேவலம் தன் புலமைக்குப் போக்கு வீடாக இயற்றவில்லை. உத்தம மனிதனாக வான்மீக முனி காட்டியதாகக் கூறப்படும் இராமன், கம்பர் காலத்துக்கு முன்பே பரம்பொருளாகத் தெரிந்துகொள்ளப்பட்டான். ஆகவே கம்பர் ஒரு புருஷோத்தமனது வாழ்க்கைச் சரிதையைக் கூறவில்லை. பரம்பொருளின் அவதார மகிமையைப் பாடிப் பரவினார். இக்கூற்று புனைந்துரையன்று. ஆதி காவியத்தில் ரிஷி இராமனைப் பற்றி வருமிடங்களில் இராமனுக்குக் கொடுக்கும் விசேஷணங்களையும் அதே போல் கம்பர் இராமனை வர்ணிக்கும் இடங்களில் கொடுக்கும் அடைகளையும் நோக்கினால் கம்பர் ஓர் இராம பக்தனாகவே நின்று இவ்விராமாயணப் பிரபந்தத்தைப் பாடினார் என்று சொல்வதில் குற்றமில்லை. "ஆசை பற்றி அறையலுற்றேன் மற்று இக் காசில் கொற்றத்து இராமன் கதையரோ" என்று அவர் தாமே பாயிரத்தில் கூறினார். எனவே இராம கதையின் மனங்கவர் தன்மையும், அக்கதை போதிக்கும் சீரிய ஒழுக்கங்களும், பரம்பொருளின் எளிமையும் உள்ளமுருக்கும் தெள்ளிய தமிழில் ஆழ்வார்கள் தங்கள் பிரபந்தங்கள் மூலம் வெளியிட்ட இராமனாகிய பரம்பொருளின் அநந்த கல்யாண குணங்களும் எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழோடு ஒன்றி வைணவம் என்[ற] பெயர் மாறித் "தமிழ்" என்றே பெயர் பெற்ற வைணவ

சமயக் கோட்பாடுகளும்* இவையெல்லாம் ஒன்ருய்ச் சேர்ந்து பண்பட்ட கம்பரது உளத்தைக் குழைத்து ஆவியை நீராய் உருக்கி அதன் பயனுய் அவர் மனத்தில் பெருக்கெடுத்த பக்தி வெள்ளம் உளங்கொள்ளாது கரை புரண்டு பொங்கித் ததும்பி உலகுய்ய வெளியே பீறிட்டுப் பாய்ந்து இராமாயண காவியமாகப் பரிணமித்தது என்று நிச்சயமாகக் கூறலாம்.

இராமன் பரம்பொருளான நாராயணனின் அவதாரம். எனவே அவனைப் பரவிய கம்பர் அந்நாராயணனைப் பர தெய்வமாகக் கொண்ட சமயிகளின் கருத்துக்களைத் தழுவியே அவனைப் பாடினுர் என்பது கூறித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை. அச்சமயக் கோட்பாடுகள் பல வற்றை ஆழ்வார்கள் தங்கள் பிரபந்தங்கள் மூலம் வெளி யிட்ட கருத்துக்களோடு ஒட்டிக் கம்பர் தம் காவியத்தில் பலவிடங்களில் வெளியிடுகிருர். அப்படிப்பட்ட இடங் களில் சிலவற்றையும், கம்பருக்கு ஆழ்வார்கள் பிரபந்தங் களில் உள்ள ஈடுபாட்டையும் ஒரு சிறிது விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கு.

இராமன் கோசலை பெற்ற மைந்தன். ஆனுல் மாற் ருந்தாயான கைகேசியால் பிரியமாக வளர்க்கப்பட்டான். அவனும் அவளிடம் எல்லையில்லாத அன்பு பூண்டிருந்தான். இத்தகைய பரஸ்பர அன்பின் முதிர்வால் கைகேசி இராமனைத் தானே பெற்ற மைந்தனுகக் கொண்டிருந்தாள் என்ருர் கம்பர்.

---

*தொன்றுதொட்டுத் தமிழ்நாட்டில் விளங்கிய சைவம் வைணவம் இரண்டும் ஒன்றித் தழைக்க வேண்டும் என்று வாழ்த்திய முன்னைய மூதறிஞர்கள், "சைவமும் தமிழும் தழைத் தினிதோங்குக" என்று கூறியமை காண்க. சைவம் என்று வட மொழித் தத்திதாந்தத்தால் சிவமதத்தையும், தமிழுக்கு முதலிடம் கொடுத்த வைணவத்தைத் 'தமிழ்' என்றும் கூறியமை காண்க.

இராமனைப் பயந்த எற்கு இடர் உண்டோ

அயோ. மந்த. 47.

என்று அவள் கூனியிடம் கூறியதைக் காண்க. அவள் அவ்விதம் கொண்டது மட்டுமன்று. தயரதனும் அப்படியே கருதுகிறான்.

வள்ளல் இராமன் உன் மைந்தன் ஆணை

அயோ. கைகே. 7.

என்று தயரதன் கைகேசியிடம் ஆணையிட்டுரைக்கின்ற போது கூறுகிறான். கைகேசி இத்தகைய மனோபாவம் கொண்டிருந்தாள் என்று கம்பர் கூறும் கருத்து,

உனைப் பயந்த கைகேசி தன் சொல் கேட்டே

பெரு. தி. 9. 1.

என்று பிரிந்த இராமனை நினைந்த தயரதன் புலம்பலாக வரும் குலசேகராழ்வார் பாசுரத்தை அடியொற்றியது.

அசோகவனத்திலே இராமனை நினைந்து உருகும் சீதை எத் திக்கிலிருந்தாவது அவன் வந்துவிடுவான் என்ற நம்பிக்கையோடு பரந்த தன் கண்களை அகல விழித்து மாதிரங்களை அளக்கிறாள். அவள் செவிகளோ இராமனுடைய திவ்விய கோதண்ட நாணின் இடி போன்ற ஓசை எப்பொழுது கேட்கும் என்று நெரித்து ஏங்கிக் கொண்டிருக்கின்றன.

உருமேறுமிழ் வெஞ்சிலை நாண் ஒலிதான் வருமே

சுந். உரு. 3.

என்பது அவள் செவிகள் ஓதிக்கொண்டிருந்த மந்திரம். பிரிவில் நலியும் நாயகியின் செவி நாயகன் வில்லின் நாணொலியை எதிர்நோக்கி நிற்கும் இந்த பாவம்,

சார்ங்க வில் நாணொலியும் தலைப் பெய்வது என்ஞான்று கொலோ

நாச். தி. 9. 9.

என்ற ஆண்டாள் பாசுரத்தைப் பின் பற்றியது.

அசோகவனத்தே தன்னிடம் வந்து தகாத வார்த்தைகளைக் கூறி வீரப் பிரதாபம் செய்துகொண்ட இராவணனைக் கண்டித்துரைக்கும் சீதை,

பத்துள தலையும் தோளும் பல பல பகழி தூவி
வித்தக வில்லினுற்குத் திருவிளையாடற்கொத்த
சித்திர இலக்கமாகும். சுந். நிந். 42.

என்று ஏளனம் செய்ததாகக் கம்பர் வாக்கு. இராவணன் தலைகளை ஒவ்வொன்ருக அரிந்து அரிந்து ரஸிப்பது இராமனுக்கு ஒரு மனத்துக்குகந்த விளையாட்டாகவிருக்கும் என்ற இக்கருத்து,

மாயன் இராவணன் மேல்
சரமாரி தாய் தலை அற்று அற்று வீழத் தொடுத்த தலைவன்
நாச். தி. 5. 3.

என்ற ஆண்டாள் அருள் வாக்கைத் தழுவியது. நடந்ததாக ஆண்டாள் கூறியதை நடக்கப் போவதாகக் கம்பரது சீதை கூறுகிருள். ஆண்டாள் பாசுரத்துக்கு வியாக்கியானமிட்ட ஆசார்யர்கள் "திருச்சரங்கள் பண்ணின பாக்கியத்தாலே தலை அறுக்க அறுக்க முளைத்த தாய்த்து பின்னை அதுவே போதுபோக்காக நின்று கொன்ருனாய்த்து. அப்படி முளைத்ததில்லையாகில் திருச்சரங்களின் வரவு இவனுல் அடக்கப் போகாதே" என்று கம்பர் பாடலை மனத்துட் கொண்டே வியாக்கியானம் செய்தனர்.

நகர் துறந்து கானகம் சென்ற இராமனை வர்ணிக்கும் கம்பர்,

தையல் தன் கற்பும் தகவும் தம்பியும்
மையறு கருணையும் உணர்வும் வாய்மையும்
செய்ய தன் வில்லுமே சேமமாகக் கொண்டு
ஐயனும் போயினன் அயோ. தைல. 48.

என்று கூறினர். இதில் இராமனுக்கு யாதினும் சிறந்த முதல் துணையாகக் கம்பர் கூறுவது சீதையின் கற்பு. இச் சிறந்த கருத்து திருமங்கை மன்னனின்

தம்பியொடு தாமொருவர் தந்துணைவி காதல் துணையாக [முனநாள்
வெம்பி எரி கானகம் உலாவுமவர்

என்ற பாசுரத்தினின்று தான் பெறப்பட்டது.

இராமனைத் தொடர்ந்து கானகம் செல்லும் கம்பர் சூரிய உதய காலத்தில் நடந்து செல்லும் இராமனுடைய வடிவழகைக் கண்டு,

மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ
ஐயோ! இவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்
அயோ. தங். 1.

என்று கரைகிறார். உள்ளத்தைத் துன்பம் மட்டுமே கரைக்கும் என்பதில்லை; வெள்ளமிட்டோடும் அழகுணர்ச்சியும் உள்ளத்தை உருக்கும் என்பதையும் அத்தகைய உணர்ச்சியை "ஐயோ" என்ற தீந்தமிழ்ச் சொல் வெகு அழகாகக் குறிக்கும் என்பதையும் நமக்குக் காட்டும் கம்பர்,

செய்ய வாய் ஐயோ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே
நீலமேனி ஐயோ நிறை கொண்டதென் நெஞ்சினையே

அமலனு. 7-9.

என்று திருவரங்கத்து அழகிய மணவாளன் பேரழகைக் கண்டு அனுபவித்த பாண் பெருமாள் அகங் குழைந்து கரைந்து அருளிய பாசுரங்களை உள்ளத்தே கொண்டுதான் அவ்விதம் கூறினர் என்பதில் ஐயமுண்டா?

குகனொடு இராமன் நட்டான். அது கேவலம் நம்மில் ஒருவன் மற்றவனோடு நட்பு கொள்வது போலல்ல. குகனை

இராமன் தன்முதல் உடற்பிறப்பாகக் கருதுகிறான். "இதோ இருக்கும் இலக்குவன் உன் தம்பி; அதனால் அவன் என் தம்பி. இந்தச் சீதை உன் கொழுந்தி; அதனால் என் மனைவி" என்று பொருள் படும்படி,

> என்னுயிர் அனையாய் நீ இளவல் உன் இளவல் இந்
> நன்னுதலவள் நின் கேள் அயோ. கங். 68.

என வரும் உயர்ந்த கம்பசித்திரம்,

> ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது இரங்கி மற்று அவற்கு இன்னருள் சுரந்து
> மாழைமான் மடநோக்கி உன்தோழி உம்பி எம்பி
> பெ. தி. 5. 8. 1.

என்று திருமங்கையாழ்வார் தீட்டிய சித்திரத்தின் மறு பிரதியே யாகும்.

அயோத்தி நகர வாசிகளுக்கு,

> காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்
> பால. நாட். 51.

என்றார் கம்பர். கேள்வி என்பது காதைகள் (இதிகாச புராணங்கள்) கேட்டலே. இறைவன் கீர்த்தியைக் கூறும் அக்கவிகள் தாம் செவிக்கினிய கனிகள். இக்கருத்து நம் மாழ்வாரின்,

> செவிகளால் ஆர நின் கீர்த்திக்கனி என்னும்
> கவிகளே காலப்பண்தேன் உறைப்பத் துற்று
> திருவாய். 3. 8. 6.

என்ற அருள் வாக்கினின்றே பெறப்பட்டது.

பரம்பொருளான நாராயணன் படைப்பு முதலிய தொழில் செய்யும் பிரம விஷ்ணு உருத்திரர்களின் செயல்களைக் கண்காணித்துத் திருத்துகிறான் என்று பொருள் படப் பெரியாழ்வார்,

மூவர் காரியமும் திருத்து முதல்வன்
பெரியா. தி. 4. 4. 1.

என்றார் அதனையே கம்பர்,

பிறத்தியாவையும் காத்து அவை பின்னுறத்துடைக்கும்
திறத்து மூவர் தம் செயலையும் திருத்தும் அத்திறலோன்.
அயோ. மந்திர. 37.

என்று வசிட்டன் வாயிலாகக் கூறி விளக்கினார்.

இறை நிலையை உணர்த்துவதில் கம்பர் ஆழ்வார்களுக்கு அதிலும் நம்மாழ்வாருக்குப் பெரிதும் கடப்பாடுடையவர். படைப்பு, அளிப்பு அழிப்பு இம் மூன்று தொழில்களையும் செய்யும் பிரமா, விஷ்ணு, சிவன் இம் மூவரும் பரம்பொருளின் வடிவங்களே எனினும் இம் மூவருக்கும் அப்பாற் பட்டவன் பரம்பொருளான நாராயணன் என்பது நம்மாழ்வாரின்,

திருமால் நான்முகன் செஞ்சடையான் என்றிவர் எம்
பெருமான் தன்மையை யாரறிகிற்பார் பேசி என்
திருவாய். 8. 3. 9.

என்ற பாசுரத்தால் தெரிகிறோம். இதனையே,

செங்கண்மால் நான்முகன் சிவன் என்றே கொலோ
எங்கள் நாயகனையும் நினைந்தது ஏழை நீ
சுந். பிணிவீட் 75.

என அனுமன் வாயிலாகவும் கம்பர் விரித்துரைத்தார்.

இவ்வுலகையும் இதிலுள்ள சராசரம் அனைத்தையும் இறைவன் தன் சரீரமாகக் கொண்டவன் என்பதும் உலகிலுள்ள சேதன அசேதனங்கள் இரண்டிலும் அவன் உயிராய் நின்று உலவுகிறான் என்பதும் வைணவ சமயத்தின் தனித்த அடிப்படைக் கொள்கைகள். இவ்வுண்மையையே சித் அசித் ஈச்வரன் என்ற தத்துவங்கள் கூறும். இதனை,

திட விசும்பு எரி வளி நீர் நிலம் இவை மிசைப்
படர்பொருள் முழுவதுமாய் அவை அவை தொறும்
உடல் மிசை உயிர் எனக் கரந்து எங்கும் பரந்துளன்

திருவாய். 1. 1. 7.

என்றார் நம்மாழ்வார். இதையே கம்பர்,

வானின்றிழிந்து வரம்பு இகந்தமாபூதத்தின் வைப்பு எங்கும்
ஊனும் உயிரும் உணர்வும் போல் உள்ளும் புறத்தும்
உளன் என்ப அயோ. க. வா.

என்றார். இதில் மற்றொரு விசேடமும் உண்டு. எத்தனையோ நூல்களின் கருத்துக்களைக் கம்பர் கையாண்டார். ஆனால் அவற்றைத் தமதாக்கித் தம் பாணியில் கூறுவதே கம்பர் முறை. எனினும் பரதத்துவ விஷயமாதலின் இங்கு 'என்று பெரியோர் பணிப்பர்' என்று பொருள்பட "என்ப" என மேற்கோளாகக் காட்டினார் கம்பர். என்ப என்பது நம்மாழ்வார் முதலிய பெரியாரையே குறிக்கும் என்பதற்கு அறிஞர்க்கு விளக்கம் தேவையில்லை.

உலகெங்கும் பரந்த பரம்பொருள் எவ்விடத்தும் இடையீடின்றியும் எவ்வித நெருக்குதலின்றியும் எல்லாப் பொருள்களிலும் உறைகின்றான் என்பது வைணவ சமயிகளின் மற்றொரு தனித்த அடிப்படைக் கொள்கை.

பரந்த தண்பரவையுள் நீர் தொறும் பரந்துளன்
பரந்த அண்டம் இது என நில விசும்பு ஒழிவு அறக்
கரந்த சில் இடம் தொறும் இடம் திகழ் பொருள் தொறும்
கரந்து எங்கும் பரந்துளன் திருவாய். 1. 1. 10.

என்பது நம்மாழ்வார் அருண்மொழி.

"கடல் நீர்த்திவலை ஒவ்வொன்றிலும் பரந்த அண்டத்தில் எவ்விதம் நெருக்கமின்றி அவனிருக்க முடியும் என்று நாம் நம்புவோமோ அதேபோல நெருக்கமின்றி உறைகிறான். நீர்த்திவலையில் எப்படி அவன் இடைவெளியின்றி

நிறைந்திருக்க முடியும் என்று நம்மால் ஊகிக்க முடியுமோ அதே போன்று அண்டம் முழுவதிலும் இடையீடின்றிப் பரந்துள்ளான். கண்ணுக்கு விஷயமில்லாத இடங்களிலும் பொருள்களிலும் கூட இவ்விதமே நிறைந்துள்ளான்" என்பது பொருள். இதனை வியாப்தி என்பர்.

இக்கருத்துக்களையே பரதத்துவ நிலையை விளக்கும் பிரகலாதன் வாயிலாகக் கம்பர் வெளியிடுகிறார்.

> சாணிலும் உளன் ஓர் தன்மை அணுவினைச் சத கூறிட்ட
> கோணிலும் உளன் மாமேருக் குன்றிலும் உளன் இந்நின்ற
> தூணிலும் உளன் நீ சொன்ன சொல்லினும் உளன்
>
> உயுத். இரணி. 124.

என்பது கம்பரைக் கற்றார் யாவரும் அவரை மிகப் புகழ்ந்து கூறும் பாடல். இது மேற்குறித்த இறைவன் வியாப்தியை (நிறைவை)யே கூறுகிறது. மேருவில் எப்படி நெருக்கமின்றிப் பரந்துள்ளானே அது போல் சாணிலும் கோணிலும் பரந்தான். கோணில் எவ்விதம் இடையின்றி நிறைந்தானே அதுபோல் மேருவிலும் நிறைந்தான். இரண்டிலும் இப்படி நெருக்கமும் இடையுமின்றி ஒரே விதமாகப்பரந்து நிறைந்த தன்மையைத் தான் "ஓர் தன்மை" என்ற சொல்லால் கம்பர் குறித்தார். மேருவும் கோணும் கண்ணுக்கு இலக்காகிய, இலக்காகக் கூடிய பொருள்கள். அப்படி இலக்காகாத பொருள்களைப் பற்றியும் இடத்தைப் பற்றியும் ஆழ்வார் கரந்த சில்லிடம், இடம் திகழ் பொருள் என்றார். அதை "நீ சொன்ன சொல்லினும் உளன்" என்றதால் கம்பர் விளக்கினார். இரணியன் சொல்லி அவனிடத்தினின்றும் சென்று பிரகலாதனை அடைகின்றனவே சொற்கள்; அவை பொருள்கள். அச்சொற்கள் அலைவடிவாய் செல்கின்றனவே அவை செல்லும்

வெளிதான் இடம். இவ்விடமும் பொருளும் கண்ணுக்கு இலக்கல்ல. அதனால் அவை இல்லை எனக் கூறமுடியுமா? விஞ்ஞானம் இரண்டும் உண்டு என்று நமக்கு நிரூபிக்கிறது. இவ்விரண்டிலும் அதாவது இரணியன் சொன்ன சொல், அச் சொல் படர்ந்து வந்த வெளி இரண்டிலும் அவன் கரந்து பரந்துளான் என்பதைச் சுருங்கச் சொல்லும் கம்பர் "நீ சொன்ன சொல்லினும் உளன்" என்பதனால் குறித்தார்.

நாம் செய்யும் கருமங்களும் அக்கரும பலன்களும் எல்லாம் அவனே என்பது சித்தாந்தம்.

> கருமமும் கரும பலனுமாய காரணன் தன்னை
>
> திருவாய். 3. 5. 10.

என்றார் நம்மாழ்வார். கம்பர்,

> கருமமும் கருமத்தின் பயனும் கண்ணிய
> தருமுதல் தலைவனும் உயுத். இரணி. 64.

என்று பணித்தார். முதல் தலைவன் என்றதால் காரணன் என்றதைக் கம்பர் விளக்கினார்.

ஆன்மாக்கள் உஜ்ஜீவிக்க வழி வகுத்துக் கொடுத்த இறைவன் எங்கேனும் ஓர் ஆன்மா உண்மையறிந்து தன்னை அடைகிறதா என்று எங்கும் தேடி அலைகின்றான். அப்படி அவன் அலையும் அலைச்சலில் ஏதேனும் ஓர் ஆன்மா அவனை உள்ளபடி அறிந்து அடைந்தால் அது தனக்குப் பேறாக அவன் உளம் மகிழ்கிறான். இதனை "சேதனலாபம் ஈச்வரனுக்குப் பேறு" என்றனர் ஆசார்யர்கள். உண்மையறிந்த ஆன்மாவுக்கு ஆண்டுகொள்ளும் சேவகனாகத் தன்னைத் தாழ விடுகிறானும் ஈச்வரன்.

அப்படி அவனை உள்ளபடி அறிவதினின்றும் ஆன்மாக்களை அறியாமை, அகங்காரம் இவை விலக்குகின்றன. அவ்

வித அகங்காரம் முதிர்ந்தால் இறைவனில்லை என்று சொல்வதோடு மட்டுமின்றி நானே இறைவன் என்றுகூட ஆன்மா பேசவும் சில சமயங்களில் செயல்படவும் தலைப்படுகிறது. அவ்வான்மாக்களைத் திருப்பாவிட்டால் உலகுக்கே கேடு சம்பவிக்கும் என்ற நிலை ஏற்படுங்கால் இறைவன் அவ்வான்மாக்களைத் திருத்த முற்படுகிறான். அம் முயற்சி மறச் செயலாக விளையினும் விளையும். அது மறக்கருணை. அவ்விதம் ஓர் ஆன்மாவின் முதிர்ந்த அகங்காரம் அறியாமை இவற்றைத் திருத்திவிட்டால் அது தனக்கு வெற்றி என இறைவன் மகிழ்கிறான். இவ்வெற்றியை அவன் பெறுவது புகழுக்காக அல்ல. அவ்வித திருந்திய சேதனன், தன் உண்மை ஸ்வரூபமான அடிமையை உணர்ந்துவிட்டால் பின்னர் இறைவன் அவனுக்குத் தோற்று அவன் ஆதீனமாகிறான். இத்தகைய 'தோல்வி'யையே இறைவன் வேண்டி அலைகிறான். ஆகவே உண்மையறியும் வரை இறைவனுக்கு வெற்றி. ஆன்மா பரம்பொருளின் நிலையையுணர்ந்து தான் அவனுக்கு அடிமை என்று வணங்கியதும் வெற்றி ஆன்மாவுடையது. அதனாலேயே 'கண்ணன் என் சீடன்' என்ற கவிதையில் கண்ணன் "தோற்றேன் என நீ உரைத்திடும் பொழுதிலே வென்றாய்" என்று வரகவி பாரதி கூறினார்.

'கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா' என்ற ஆண்டாள் பாசுரத்துக்கு உரையிட்ட ஆசார்யர்கள் இத்தகைய தோல்வியை இராவணன்பால் பெற, "பெருமாள் பாக்கியம் பண்ணிற்றிலர்" என்று கூறினர். இத் தோல்வி முன் சொன்ன வெற்றியோடு ஒன்றியது. எனவே இத் தோல்வி பெறாத வழி முன்னைய வெற்றியும் உண்மை வெற்றியல்ல. இராவணன் மாண்டான் என்று தேவரும் பிறரும் அதை வெற்றியாகக் கருதலாம். ஆனால் பெருமாள் திருவுள்ளத்தில் அது வெற்றியல்ல. உண்மை வெற்றி சேதனனுடைய

ஆணவத்தை அதற்கு அடிப்படையான அறியாமையை அழித்தலில் தான் என்பது ஆசார்யர்கள் துணிபு. இத்தகைய வெற்றி இராமனுக்கு வாலியால் கிட்டியது. "என்று தானும் எயிறு பொடிபட," கோபத்தோடு இராமனை வசை கூறிய வாலி, இராமன் வார்த்தைகள் கேட்ட பின் என்னவானான்? கம்பர் அதனை எத்துணை நயமாகக் கூறுகிறார் பாருங்கள்.

கவிகுலத்தரசு மன்னன் கட்டுரை மனத்துட்கொண்டான்
அவியுறு மனத்தனாகி அறத் திறன் அழியச் செய்யான்
புவியிடை அண்ணல் என்பதெண்ணினன் பொருந்தி
[முன்னே
செவியுறு கேள்விச் செல்வன் சென்னியை இறைஞ்சிச்
[சொன்னான்

கிஷ். வாலி. 138.

இதில் முன்னே செவியுறு கேள்விச் செல்வன் என்றது கேள்வியால் இறை நிலையை முன்பே அறிந்தவன் வாலி என்பது கூறினார். அவ்வறிவை அகங்காரம் மறைத்தது. அகங்காரம் வரவலியால் வந்தது. அவ்வரவலி ஓயவே அகங்காரம் அவிகிறது. இதையே அவியுறு மனத்தன் என்பதால் விளக்கினார். அவ்வகங்காரம் அவியவே இறை நிலையை உணர்கிறான். 'அண்ணல்' என்று அவன் கூறியது இதையே குறிக்கும். அதோடு இறைவன் செய்தது தவறல்ல என்றும் உணர்கிறான். உணரவே முன்பு இருந்த சீற்றம் அன்பாக பக்தியாக மாறுகிறது. அதனால் அவன் மனம் இறைவனோடு பொருந்துகிறது. பொருந்தியதும் ஆன்மா தன் உண்மை ஸ்வரூபமான அடிமையை உணர்கிறது. உணரவே அவன் தலை தாழ்கிறது. அவன் தலை தாழ்த்தியது இராமனுக்கு வெற்றி. ஆகவே இறைவன் வெற்றி வாலியின் அறியாமையை அழித்ததுதான். இப்பொருளுக்கு வித்து திருமழிசையாழ்வாரின்,

—க்ழிசினத்த

வல்லாளன் வானரக்கோன் வாலி மதனழித்த
வில்லாளன் நான். திரு. 85.

என்ற அருள் வாக்கில் இருக்கிறது. இதில் ஆழ்வார், "வாலி உயிர் தொலைத்த" "உயிர் குடித்த" "வலியழித்த" என்றெல்லாம் கூறலாம். வாலியின் உயிர் நீக்கலே உண்மை வெற்றியாயின் பாட்டின் சீரும் ஓசையும் குன்றவும் செய்யாது. எனினும் அவ்விதம் கூறுமல் 'வாலி மதன் அழித்த' என்ருர் ஆழ்வார். வாலியின் அறியாமையை அழித்த வெற்றியை உடையவன் என்கிருர். மதன் என்பது அறியாமை. ['உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்ருள்' என்ற திருமுருகாற்றுப்படை அடிக்கு அன்பரின் அறியாமையை உடைத்தற்குக் காரணமான திருவடி என்று பொருளுரைத்தார் நச்சிஞர்க்கினியர்] இந்தப் பாசுரத்தை உட்கொண்டே கம்பர் முன்னே, "செவியிறு கேள்விச் செல்வன் அவியுறு மனத்தணுகி, புவியிடை அண்ணல் அறத்திறன் அழியச் செய்யான் என்பதெண்ணினன் பொருந்திச் சென்னியை இறைஞ்சிச் சொன்ஞன்" என்று வெகு நயமாகக் கூறிஞர்.

ஆழ்வார்களுக்கும், ஆழ்வார்கள் அருளிய பிரபந்தங்களுக்கும் அப் பிரபந்தங்கள் போதித்த கொள்கைகளுக்கும், அக்கொள்கைகளைப் பேணி வளர்த்த ஆசார்யர்களுக்கும் கம்பர் எத்துணைக் கடமைப்பட்டுள்ளார் என்பதில் ஒரு சிறு பகுதி இங்கு கூறப்பட்டிருக்கிறது. பக்தியும் அறிவாற்றலும் உள்ள பெரியார்கள் கம்பரை நன்கு ஆய்ந்து இம்முறையில் அவர் பெருமையைப் பிரகாசிக்கச் செய்வார்களாஞல் அதுவே "தமிழு"க்கும் கம்பருக்கும் அவர்கள் ஆற்றும் சீரிய பணியாகும்.

# எதை எழுத?

"நெடியோன்"

காலையில் 'காப்பிக்கடனை' முடித்த பிறகு பத்திரிகை படிப்பதென்பது வழக்கமாகி விட்டது எனக்கு. இன்றும் காப்பிக்குப் பிறகு பத்திரிகையைப் பிரித்தேன். கண்கள் எழுத்தின் மீது 'ஊர்ந்து' சென்றனவே தவிர, மனம் அதில் ஊன்றவில்லை. மூட்டம் போட்ட வானம் போன்று மனம் தெளிவின்றி இருந்தது. காற்றில் சிதறும் மேகப் பஞ்சுகள் போல ஏதேதோ எண்ணங்கள் வந்து போய்க் கொண்டிருந்தன. ஒன்றும் நிலைக்கவில்லை. எண்ண அலைகள், மேற்கோள் நுரைகள் ஆகியவற்றுடன் மனம் கடல் போன்று அலைந்து கொண்டிருந்தது.

"கல்வி ஒருவனை உயர்த்துகிறது; சிந்தனை சரிப்படுத்துகிறது; எழுத்து அவனுக்கு முழுமையளிக்கிறது" என்று பேகன் சொன்னதாக யாரோ சொன்னது நினைவுக்கு வந்தது. இதைப் பிடித்துக் கொண்டது என் உள்ளம். இதையே திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்தேன். இதை என் வாழ்க்கையில் ஒட்டிப் பார்க்க விரும்பினேன். அதை நிறைவேற்றியும் விட்டேன்.

நான் படித்த புத்தகங்களை யெல்லாம் ஞாபகப்படுத்திக்கொள்ள முயன்றேன். எல்லாம் சரியாக வரவில்லை. அதிகமாகப் படித்ததால் மறதியும் மிகுதியாக இருக்கிறது என்று என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன். இதிலிருந்து "வேண்டிய அளவுக்கு நாம் படித்தாயிற்று"

என்ற எண்ணம் தோன்றியது. ஆகவே நானும் உயர்ந்த வனாகிவிட்டதாகக் கருதினேன்.

அடுத்த நிலை சிந்திப்பது அல்லவா? 'எப்பொழுதாவது எதையாவது சிந்தித்திருக்கிறேனா?' என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன். பூமராங் திரும்பி வருவதைப் போல இந்தக் கேள்வி திரும்பி வந்தது. 'சிந்தனை என்றால் என்ன.' என்ற மற்றோருருவத்தில், ஒரு கணம் திகைத்து விட்டேன். "இந்தச் சிந்தனை என்பது தான் என்ன?" 'சிந்தித்தல் என்னும் வினை பெயராகும் பொழுது சிந்தனையாக மாறும்' என்று இலக்கணம் என் உதவிக்கு வந்தது.

சிந்தித்தல்-நினைத்தல், எண்ணுதல் அல்லவா? நான் நினைப்பதெல்லாம் சிந்தனையே யாகும் என்ற முடிவு கிடைத்தது. என் சிந்தனையில் வந்தவை யாவை? நேற்றைய நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாய்ப் படமாயின...

காலையில் தண்ணீர் விடாததால் வீட்டுக்காரனைப் பற்றிக் கேவலமாக நினைத்தேன்... "இன்றைக்குத் திங்கட்கிழமை. ஆகவே காண்டீனில் வெங்காய சாம்பார்; உருளைக் கிழங்கு போண்டா"... சிந்தனைக் கயிற்றைப் பட்டென்று நானே அறுத்துவிட்டேன். இதெல்லாமா சிந்தனைகள்? அவை உயர்ந்தவையாக இருக்கவேண்டாமா? இவை உயர்ந்தவை அல்ல என்றாலும், சிந்திக்க முடியும் என்றால் என்ற சமாதானத்தை நானே தேடிக்கொண்டேன்.

உடனே, முழு மனிதனாக வேண்டும் என்ற ஆசை எழுந்தது. அதற்கு வழி எழுத்து அல்லவா? பேனா, காகிதம் ஆகியவற்றை ஒழுங்காக எதிரில் வைத்துக் கொண்டேன். பிள்ளையார் சுழியும் போட்டேன். என்ன எழுதுவது? தலைப்பா? தலைப்புத் தந்து விட்டுப் பிறகு விஷயத்தை எழுதுவதா? அல்லது தலைப்பைக் கடைசியில் சூட்டுவதா?

இந்த விவாதம் வளர்ந்து கொண்டு சென்றதே ஒழிய, இரண்டுமே வெளிவரவில்லை.

என்ன எழுதுவது? கதையா, கட்டுரையா, கவிதையா? கதையும், கவிதையும் எல்லோரும் எழுதுகிறார்கள். கட்டுரை எழுதினால் எல்லோரும் அதைப் படிக்க மாட்டார்கள். அந்தப் பக்கம் வந்தவுடன் மேலே நான்கு பக்கம் தள்ளிப் புரட்டி விடுவார்கள். ஆகவே என்ன செய்வது?

மனத்தில் தோன்றுகின்ற எதையாவது எழுதுவது? இப்பொழுது மனத்தில் நிலவுகின்ற எண்ணம் என்ன?... என்ன!...ஒன்றுமே இல்லையா? இவ்வளவு நேரம் வரையில் எண்ண அலைகள் மணிக்கு முந்நூறு மைல் வேகத்தில் மனக்கரையில் வந்து மோதினவே? எழுத உட்கார்ந்தவுடன் ஒன்றுமே தோன்றவில்லையே! நான் முழுமை அடைவது எப்படி?

· உட்கார்ந்து கொண்டே இருந்தால் அப்படியே இருக்க வேண்டியது தான். எதையாவது எழுதத்தான் வேண்டும். எந்தத் துறையில் எழுதலாம்? காதலா, கசந்து போன ஒன்று; கண்ணீர்க் காவியமா? எல்லோருடைய வாழ்க்கையிலும் காணப்படும் ஒன்று பட்ட பகுதி அது. சமயம்—பலர் அதை விரும்பமாட்டார்கள்; சிலருக்கு அது விளங்காது; அரசியல்—ஐயய்யோ, அது ஒரு குழம்பிய குட்டை; அறிவுரை—இதைத் தாராளமாகச் செய்யலாம்; ஆனால் யாரும் படிக்கமாட்டார்கள். உலகத்தில் வேறு பொருளே இல்லையா? அட, கடவுளே?

ஒருவேளை கல்லூரியில் படித்த இலக்கிய விமரிசனம் இந்த வகையில் உதவக்கூடும் அல்லவா? "உணர்ச்சி ஓங்கி, நிலைத்த பிறகு, அமைதியான நிலையில் அதை நினைவு கூர்ந்து வெளிப்படுத்தப்படுவதே இலக்கியம்"—வேர்ட்ஸ்வொர்த்.—இது, ஒன்றும் பிடிபடுவதாகத் தெரியவில்லையே?

"கலைஞனுக்குக் கட்டுப்பாடு கூடாது"— எனக்கு ஒருவித கட்டுப்பாடும் இப்பொழுது, இங்கே இல்லையே? மனைவி கூடச் சமையலறையில் அல்லவா மூழ்கி இருக்கிருள்?

"உண்மையான கலைஞனுக்கு இதுதான் வேண்டும் என்பது இல்லை. குமரிமுனையிலிருந்து குண்டூசி வரை எதுவும் அவனது கலைப் பொருளாக மிளிரும்." இது யாரோ வெத்து வேட்டு விமரிசகன் சொன்னது. எனக்கு ஒன்றுமே வரவில்லையே? ஒருவேளை நான் உண்மையான கலைஞன் இல்லையோ?...அப்படியெல்லாம் இருக்காது. அதற்கு வேண்டிய—புத்தகப் படிப்பு, சிந்தனை ஆகிய இரண்டும் தான் என்னிடம் இருக்கின்றனவே? கொஞ்சம் முயன்முல் எழுதி விடலாம்... தளர்ச்சி கூடாது... எல்லா எழுத்தாளர் களும் முதலில் இப்படித் தயங்கித் தான் பிறகு பெரியவர் களாக மாறினர்கள்..... இது கிடக்கட்டும், என்ன எழுதவேண்டும்?

எதை எழுத?

"மணி என்னவென்று தெரிகிறதா?"- என் மனைவியின் ஆதிக்கக் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். மணி ஒன்பது. இனி, விழுந்தடித்துக் குளித்துவிட்டு, கூலி'க்காக வேலை செய்யப் புறப்பட வேண்டும்.

குளிக்கும்போதெல்லாம் என் மனத்தில் எழுந்த ஒரே கேள்வி, "இவ்வளவு நேரம் முயன்றது எதை எழுத?"

விடை உங்களுக்குத் தெரிகிறதா?

# போலீஸ்-பொதுஜனத் தொடர்பு

நாடெங்கிலும், போலீஸ்–பொதுஜனத் தொடர்பை மேற்கொண்டும் சிரிய வகையில் அபிவிருத்தி செய்வதற்காக, போலீசாரால், விரிவான இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் விசாரணையின் தரத்தையும் போலீசாரின் நடத்தையையும் அபிவிருத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இது விஷயமாக பல்வேறு ராஜ்ய சர்க்கார்களும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய பரிசீலனையொன்றிலிருந்து இது தெரிய வருகிறது; அந்தப் பரிசீலனை பற்றிய விவரச் சுருக்கம் ஒன்றை இந்திய சர்க்கார் புத்தக வடிவில் இப்பொழுது வெளியிட்டுள்ளனர். இச்சிறு புத்தகம், குறிப்பிட்ட பிராந்தியம் அல்லது ராஜ்யத்துக்கு மிகவும் பொருத்தமான முறையில் இவ் வேலையை விஸ்தரிப்பதற்கு, போலீஸ் இன்ஸ்பெக்டர்–ஜெனரலுக்கு பிரயோசனப்படுவதுடன், போலீஸ் சேவை பற்றி பொது மக்கள் நன்கு தெரிந்துகொள்வதற்கும் பிரயோசனப்படும்.

## முக்கிய நடவடிக்கைகள்

இந்தப் புத்தகத்தின் ஆரம்பத்தில், எல்லாவிதமான போலீஸ் வேலைகளின் வெற்றிக்கும் போலீஸ்–பொதுஜன சுமுகத் தொடர்பு மிகவும் முக்கியம் என்றும் இது நாட்டிலுள்ள போலீஸ் அதிகாரிகள் அனைவரின் கவனத்திலுமிருந்து வருகிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. லஞ்சம், போலீசார் அல்லது சர்க்கார் ஊழியரின் தவறான

நடத்தை முதலியவற்றைப் பற்றிய புகார்களின் விசாரணையைத் துரிதப்படுத்த விசேஷ போலீஸ் பிரிவை ஏற்படுத்துவது, போலீஸ் விளையாட்டுகளையும், கண்காட்சிகளையும் நடத்துவது, அவைகளைக் காண பொதுமக்களுக்கு அழைப்பு விடுவது போன்றவை, போலீஸ்—பொதுஜனத் தொடர்பை அபிவிருத்தி செய்வதற்காக போலீசார் எடுத்துள்ள சில நடவடிக்கைகளாகும். இவைகளைப்பற்றியும் இப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

போலீஸ் அதிகாரிகள் தங்கள் தங்களுடைய பிரதேசங்களில் சுற்றுப்பிரயாணம் செய்வது மிகவும் முக்கியமெனக் கருதப்படுகிறது. ஸீனியர் அதிகாரிகள் தங்களால் முடிந்தவரை அடிக்கடி கிராமங்களுக்குச் சென்று, கிராமங்களில் போலீசார் எவ்விதம் நடந்து வருகின்றனர் என்பதைப்பற்றியும் குற்றப் பிரச்னைகளைப் பற்றியும் கிராமவாசிகள் தங்களிடம் சம்பாஷிப்பதற்காக அவர்களுக்கு ஊக்கமளித்து அதன் மூலம் கிராமப்புறங்களிலுள்ள மக்களுடன் நெருங்கிய சுமுகத் தொடர்பை ஏற்படுத்தி வருகிறார்கள்.

சில ராஜ்யங்களில்,பொதுஜனத் தொடர்புப் பயிற்சிக்கான வகுப்புகளில் போலீசார் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கு வசதியளிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன், தகவல் தரும் ஸ்தாபனங்களும் நிலையங்களும் போலீசாரால் நடத்தப் பட்டு வருகின்றன. ஸீனியர் போலீஸ் அதிகாரிகள், தங்களுடைய பிரதேசங்களில் உள்ள பத்திரிகை ஸ்தாபனங்களுடனும் பொதுஜன சேவை செய்யும் பிரமுகர்களுடனும் நெருங்கிய தொடர்பு கொள்ளவும் வேண்டியிருக்கிறது.

### பொதுமக்கள் ஒத்துழைப்பு

உஷார் கமிட்டிகள், நெருப்பணைக்கும் படை, ரைபிள் கிளப் முதலிய ஸ்தாபனங்கள் மூலமாக, பொதுஜனங்கள்

போலீஸ் வேலைகளில் பங்கெடுத்துக்கொள்கிறார்கள். இந்த ஸ்தாபனங்களில், பொதுஜனங்கள் கௌரவ அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அநேக ராஜ்யங்களில் 'மரியாதை' வாரங்கள், 'விபத்து அற்ற போக்கு வரத்து' வாரங்கள் நடைபெற்றன. போலீசார் புரியும் சேவை என்ன வென்பதைப் பற்றிப் பொதுமக்களுக்கு விளக்கும் பிரசங்கங்களைச் செய்தல், போலீஸ் முறைகளைப் பற்றி ரேடியோ மூலம் விளக்குதல், அம்முறைகளைப் பற்றி சினிமாப் படமெடுத்து அதைத் திரையிட்டுக் காட்டுதல் முதலியவற்றையும் போலீசார் புரிந்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகளின் பயனாக, நம் நாட்டிலே போலீஸ்—பொதுஜனத் தொடர்பில் சீரான முன்னேற்றம் காணப்படுகிறது.

ஜனநாயக ராஜ்யத்தில், ஜனநாயக முறைப்படியும் பொதுஜன அபிப்பிராயத்தை அனுசரித்ததுமான வழிகளில் உயிரையும், உடைமைகளையும் காக்கும் கடமையுள்ள பொதுஜன ஊழியர்கள்தான் போலீஸ் படையினர். இப்பொறுப்பை இவர்கள் சரிவர நிறைவேற்றுவதற்கு, போலீசார்-பொதுமக்களின் உற்சாகமான ஒத்துழைப்பையும் அன்பையும், ஆதரவையும் பெறவேண்டும்.

எனினும், ஜனநாயக ஆட்சி முறையில் போலீசாரின் பொறுப்பின் முக்கியத்துவத்தையும் பொதுமக்கள் உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும். போலீஸ்-பொதுஜன நட்புக்கும், நல்லுறவுக்கும் மட்டுமின்றி, போலீஸ் படையினரின் வேலைகள் வெற்றிகரமாக நடைபெறுவதற்கும்கூட, போலீசாருக்குச் சாதகமான பொதுஜன ஆதரவு இருக்கவேண்டியது அவசியமாகும். மேலும், போலீசாருடன் பொதுஜனங்கள் ஒத்துழைப்பதற்கான வழிகள் எத்தனையோ இருக்கின்றன. உதாரணமாக, சில சந்தர்ப்பங்

களில், குற்றப்புலன் விசாரணையில் பொதுமக்கள் தலையிடாமல் அடியோடு விலகி நிற்பது போலீசாருக்குத் தங்கள் கடமையைச் செய்வதில் பெரும் உபகாரமாக இருக்கும். வேறு சில சமயங்களில் சமூகத் துரோகக் கோஷ்டிகளை அடக்குவதில் மக்களின் அனுதாபம் மட்டுமில்லாமல், தீவிர சகாயமும் போலீசாருக்குத் தேவையாக இருக்கும்.

## பொதுஜன ஆதரவு

பொதுமக்கள் விலகி நிற்கவேண்டிய சமயம், அல்லாமல் தீவிரமாகப் போலீசாருடன் ஒத்துழைக்க வேண்டிய சந்தர்ப்பம், இவற்றை உதாரணத்தின் மூலமே நன்கு விளக்கலாம். ஒரு விபத்து அல்லது காலாடித்தனம், அல்லது கத்திக்குத்து நடப்பதாக வைத்துக்கொள்வோம். அம்மாதிரியான சமயங்களில் போலீசார் தங்கள் கடமைகளைச் செய்வதில், பொதுஜன ஒத்துழைப்பு எப்படியிருந்தால் உபகாரமாக இருக்குமென்று ஆராய்வோம். பொதுவாக இம்மாதிரி விபத்துக்கள் ஏற்பட்ட ஸ்தலத்தில் ஜன நெருக்கடி அதிகமாகவே இருக்கும். கூட்டத்தில் சிலர் வெறும் வேடிக்கை பார்ப்பவர்களாக இருக்கலாம். வேறு சிலர், நல்லெண்ணத்துடன் காயம்பட்டவர்களுக்குத் தங்களாலியன்ற உதவியைச் செய்ய முயற்சி செய்பவர்களாக இருக்கலாம். வேறு சிலர், விஷயங்களை அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலால் துப்பறிபவர்களாகிவிடலாம். ஆனால், இதுமாதிரி முதற் சிகிச்சையளிக்க முன்வருபவர்களும், புலன்விசாரணையிலிறங்க முற்படுபவர்களும் இத்தொழிலில் பயிற்சிபெற்றவர்களாக இல்லாமல் இவற்றில் ஈடுபடுவது போலீசாருக்கு உதவி செய்வதாகாது. அது மட்டுமல்ல. கூட்டங்கள் கூடுவதனாலும், லாயக்கற்றவர்கள் வைத்திய உதவிசெய்ய முயற்சிப்பதாலும், துப்புத் துலக்கப் பார்ப்பதாலும் குற்றங்கள், விபத்துக்களைப்

போலீசார் கண்டுபிடிப்பதற்கு முக்கியமான ஆதாரங்கள், துப்புகள் சிதைக்கப்பட்டோ அல்லது அழிக்கப்பட்டோ போய் போலீசாரின் வேலை சிரமமாக வேறு ஆகிவிடும். இத்தகையோர்களின் செய்கை உபகாரத்துக்குப் பதிலாக அபகாரமாக முடிந்துவிடும். இச்சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் விலகி நிற்பதே மேல்.

ஆனால் வேறு சில விஷயங்களிலும், சந்தர்ப்பங்களிலும் பொதுமக்கள் இப்படி விலகி நிற்பது கூடாது. உதாரணமாக, ஒரு விபத்து நடந்ததை நேரில் கண்டவர், தனக்குத் தெரிந்த தகவல்களைப் போலீசாருக்கு விவரமாகச் சொல்லவேண்டும். இதன் மூலம் விபத்து ஏற்பட்டதன் காரணகாரியங்களைப் போலீசார் நிர்ணயிக்கக்கூடும். மேலும், எதிர்பாராது ஏற்படும் விபத்துக்கள், குற்றங்களைப் பற்றித் தங்களுக்குத் தெரிந்த தகவல்களை உற்ற அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டியது ஒவ்வொரு பிரஜையின் சட்டபூர்வமான கடமையாகும். ஸ்விட்சர்லாந்தில் 'திட்டமான முறைப்படி பொதுமக்களுக்குப் போலீசார் தொடர்ந்து பயிற்சியளித்ததன் பயனாக, ஒவ்வொரு பிரஜையும் போலீசாருக்கு உதவியாகவும், புலன் விசாரணைப் பிரிவுக்கு ஆதரவாகவும் இருக்கும்படி செய்திருக்கிறார்கள்' என்று ஒருவர் எழுதியுள்ளார். இந்தஸ்விஸ் முறை நம் நாட்டிலுள்ள எல்லா ராஜ்யங்களிலுமே கையாளப்படலாம்.

**போலீசாரின் பொறுப்பு**

போலீசாரின் பொறுப்புக்களைப் பற்றி சிலர் அடிக்கடி திருத்திக்கூறுகிறார்கள். போலீசார் உண்மையான குற்றவாளிகளிடம் பட்சமாகவும் இதரர்களிடம் கடுமையாகவும் நடந்துவருகிறார்கள் என்ற ஒரு தப்பெண்ணம் பரவலாக இருந்துவருகிறது. போலீசாரிடம் பொதுமக்கள் வேண்டா வெறுப்புடன் நடந்துகொள்ளும் பான்மைக்குக் காரணமாகவுள்ள இந்தத் தவறான எண்ணம், இந்தியாவில் மட்டு

மில்லை. 'எவ்வளவு பிரதிகூலமான நிலைமைகளில் போலீசார் தங்கள் கடமைகளை ஆற்ற வேண்டியிருக்கிறதென்பதையும், இதில் ஏற்படும் பிரத்தியட்ச கஷ்ட நஷ்டங்களைப்பற்றியும் பொதுமக்கள் உணர்ந்தவர்களாகத் தெரியவில்லை' என்று பரூஸ் ஸ்மித் கூறியுள்ளார். 'போலீசார் தங்கள் பிரஜா உரிமைகளைக் கௌரவித்து நடந்துகொள்ள வேண்டுமென்ற ஒருவித தெளிவற்ற எண்ணமே பொதுவாக மக்கள் மனத்தில் பதிந்துகிடக்கிறதே தவிர, இந்தப் பாதுகாப்பு சட்டப்படி நடப்பவர்களுக்கும், சட்டத்தை மீறுபவர்களுக்கும் கூட உண்டு என்பதை இவர்கள் உணருவதில்லை' என்று இவர் மேலும் சொல்லியிருக்கிறார். இதனால்தான் மக்கள் பொறுமை இழந்துவிடுகிறார்கள். இதன் விளைவாக, போலீசார் குற்றவாளிகளின் அனுதாபிகளாக இருக்கிறார்களென்றும் நினைக்கிறார்கள். ஆனால் போலீஸ் படையினர், நிர்வாக யந்திரத்தின் ஓர் அம்சந்தான். இவர் இஷ்டப்படி ஒருவருக்குப் பரிசளிக்கவோ அல்லது தண்டனை விதிக்கவோ முடியாது. இது நீதி இலாகாவின் வேலை. இது தவிர, குற்றவாளி யார், நிரபராதி யார் என்று கண்டு பிடித்து விடுவது அவ்வளவு எளிதான காரியமல்ல. ஆகையினால்தான் போலீசார், ஒரு விபத்திலோ, சந்தேகாஸ்பதமான சம்பவத்திலோ ஈடுபட்டுள்ளவர்களிடத்தில் கடுமையாகவும், அன்பாகவும் இல்லாதபடியான ஒரு நடுவழியைக் கையாளவேண்டியதிருக்கிறது. போலீசார் கடைப்பிடிக்கும் வழி புரியாததோர் புது வழியாகத் தான் தோன்றும்.

## போலீசாரும் பிரஜைகள் தான்

இந்த வாதத்தை அதன் முடிவுவரை கொண்டு போவோமானால் போலீசாரைப்பற்றிப் பிரதம மந்திரி கூறியிருக்கும் கீழ்க்கண்ட கருத்துக்கே நாமும் வருவோம்.

"போலீஸ்காரரும் மற்ற எந்தப் பிரஜையையும் போல் ஒரு பிரஜைதான். அவரும் பிரஜா உரிமைகள், கடமைகளுக்கு உட்பட்டே தன் கடமையைச் செய்யவேண்டும்" என்பதே பிரதமரின் மொழிகள். போலீசாருக்குக் கடினமான விசேஷப் பொறுப்பும் இருக்கிறது என்று பிரதம மந்திரி மேலும் தெரிவித்துள்ளார். எனவே, ஏற்கெனவே சிரமமான கடமையை ஆற்றுவோருக்குப் பொதுமக்கள் அதிகக் கஷ்டத்தைத் தரக்கூடாது.

போலீசாருக்கு உரிய கௌரவத்தைப் பொதுமக்கள் இவர்களுக்கு அளிப்பதற்கு, இவர்களைத் தங்களுக்குச் சமமான பிரஜா உரிமைகளைப் பாதுகாக்கும் சேவையாளர்களுக்குரிய மரியாதையையும் அளித்து சட்டத்தையும், ஒழுங்கையும், அமைதியையும் நிலை நாட்டும் சின்னங்களாகவும் இவர்களைக் கருதி நடக்க வேண்டும். இம்மாதிரியான மூவகைக் கடமைகளையும் போலீசார் சரிவரப் புரிவதற்கு உதவியாகப் பொதுஜனத் தலைவர்களில் பிரபலஸ்தர்கள் போலீசாரின் வேலையில் பங்குகொள்ளவேண்டும். பம்பாய் நகரில் உள்ளதுபோல், போலீசாருக்கு ஆலோசனை கூறுவதற்கான கமிட்டிகள் நியமிக்கப் படலாம். இவற்றினால் போலீஸ் பொதுஜன உறவு நட்புடையதாக இருக்கும். போலீசாரின் வேலை திறம்பட நடக்கவும் வழியேற்படும். கிராமப் பிரதேசங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், இப்பொழுது சில இடங்களில் மட்டும் இருந்துவரும் கிராமப் பாதுகாப்புப் படை ஸ்தாபன முறையை நாடு முழுமையிலுமே ஏற்படுத்தலாம். இப்படிச் செய்வதால் பொதுமக்களின் சமூகக் கடமையுணர்ச்சி வளரும். போலீஸ் பொதுஜனத்தொடர்பும் சீர்படும். குற்றங்களைத் தடுப்பதில் இவ்விருசாராரும் உற்சாகத்துடன் ஒத்துழைக்கவும் வழி பிறக்கும்.

# ஸ்ரீ தியாகராஜர்

கே. வாசுதேவ சாஸ்திரியார்

சென்னையை விட மாட்டோம் என்று ஆந்திரரோடு போட்டிபோட்டு வெற்றி பெற்ருேம். ஆந்திர எல்லைக் குள்ளே திருத்தணியிலே, திருப்பதியிலே தமிழர் உரிமையைக் காப்பதற்காக இன்றும் போராடிக் கொண்டி ருக்கிருேம். ஆனுல் நம் தமிழ் நாட்டின் எல்லைக்குள்ளே காவிரியின் கரையிலே திருவையாறு க்ஷேத்திரத்திலே ஒரு தெலுங்கு மகானின் ஆராதனை தினத்தை உற்சாகமாகக் கொண்டாடி வருகிருேம்.

ஆந்திர நாட்டு எல்லையிலே மொழிப் போராட்டம் நடத்துகிற தமிழன் தன் தமிழ் நாட்டின் எல்லையிலே ஜீவன் நிறைந்த தெலுங்கு சாஹித்தியங்களை விட்டுப் போன ஒரு சிரஞ்சீவி சாஹித்தியகர்த்தாவின் புனிதத் திருநாளை இன்று கோலாகலமாகக் கொண்டாடுகிருன்.

இது 1955 ஆம் வருஷத்தில் ஒரு விந்தைச் செய்தி என்று எண்ணிவிட வேண்டாம். தமிழர் பரம்பரையின் நாகரிகச் சின்னமான கலா ரசனையின் கோல்தான் இது. நல்ல கலை எங்கிருந்து வந்தாலும்-எந்த இனம் தந்தாலும்-தன் சொந்த மொழிக்கு-தன் சொந்த கலாசாரத்துக்கு இடையூறு செய் யாத வரையில் அந்தக் கலையை அதற்குரிய முறையில் போற்றி ஆதரிப்பதே தமிழ் இனத்தின் பரம்பரைப் பெருமை என்பது சரித்திர ஏடுகள் குறித்துப் பாதுகாத்து வைத்திருக்கும் ஆராய்ச்சி உண்மைகளாகும். கலையை

ரசிக்கும்போது பாகுபாடு செய்யாத ஒரே இனம் தமிழினம்தான் என்ற உண்மையும் இங்கே வெளியாகின்றது.

## கம்பனும் தியாகராஜரும்

கம்பன் கவிச் சித்திரம் தமிழருக்குக் கவிதை மலையின் சிகரம் போல. அது போல இசைக் கலையின் சிகரம் தியாகராஜரின் கீர்த்தனைச் சித்திரம். உணர்ச்சியை வார்த்தையாக வார்த்து ராமன் உருவத்தை—ராமன் குணச்சித்திரம் முழுவதையுமே கம்பன் கவிதையாக உருவாக்கினான். உணர்ச்சியைச் சங்கீதமாகப் பொழிந்து ராமன் புகழை ஸ்ரீ தியாகராஜர் பாடினார்.

ஒரே உணர்ச்சியில் பல வகைகளைக் கவிதையில் வடித்தெடுத்தவன் கம்பன். சிருங்கார ரஸத்தை கவிதையாக்கிய போது அந்தக் காதலில் வீரம்—காதலில் சோகம்—காதலில் ஹாஸ்யம்—காதலில் பயம்-இப்படி அற்புதக் கற்பனை செய்து ரஸபாவங்களைச் சித்தரித்துக் காட்டினான் கம்பன். அது போல ஒரே ராகத்தில் விதவிதமான மெட்டுகளில் கிருதிகளை அமைத்து ராமன் புகழ் பாடிவிட்டுப் போனவர் ஸ்ரீ தியாகராஜர். ஒரு ராகத்தை எத்தனை விதமான மெட்டுக்களில் அமைக்க முடியும் என்பதை நமக்குத் தெளிவாகக் காட்டிய ஒரே சாஹித்திய கர்த்தா ஸ்ரீ தியாகராஜர் என்றால் அது மிகையாகாது. அவருடைய இந்தத் திறமை சங்கீதக்கலையில் அவருக்கு இருந்த திறமை சங்கீதக் கலையில் அவருக்கு இருந்த சக்தியைக் காட்டுகிறதா, அல்லது அவர் உள்ளத்தில் குடி கொண்டிருந்த—ராமனிடம் அவருக்கு இருந்த பக்தியைக் காட்டுகிறதா என்றால், இரண்டையும் தான் காட்டுகிறது என்று சொல்ல வேண்டும். 'இன்று ராமன் மீது ஒரு கீர்த்தனை பாடுவோம்' என்று ஸ்ரீ தியாகராஜர் திட்டம் போட்டு சாஹித்தியம் செய்ததாகத் தெரியவில்லை. 'இந்தப் பாட்டை எந்த ராகத்தில்

எப்படி அமைக்கலாம்?' என்று முன் கூட்டியே யோசனை செய்ததாகவும் தெரியவில்லை. 'இந்தப் பாட்டில் எந்த வார்த்தையைப் போட்டால் எதுகையும் மோனையும் சந்தமும் தாளமும், ரஸமும் பாவமும் பொருத்தமாக அமையும் என்று சற்றும் யோசித்ததாகவும் தெரியவில்லை.

## அவர் எப்படிப் பாடினார்?

பின் அவர் எப்படிப் பாடியிருப்பார்? ஏதோ ஒரு சூழ் நிலையில் ஸ்ரீ தியாகராஜர் இராமனை தியானம் செய்வார். அப்போது இராமனின் திருவுருவம் ஒரு சித்திரமாக—ஒரு கற்பனைக் காட்சியாக அவர் மனக் கண் முன்பு தோன்றும். அவர் சிந்தனையில் உருவாகிய அந்தக் கற்பனைக் காட்சியில் அவர் லயித்து நிற்கும்போது அவர் இதயத்தில் உணர்ச்சி (பக்தி) ஊற்று போல் சுரந்து நின்று வழிந்து ஓடி, வார்த்தைக் கவிதைகளாக, கீர்த்தனைச் சித்திரங்களாக வெளி வரும். அன்று ஸ்ரீ தியாகராஜர் விட்டுப் போன இதய கீதம் இன்று பல்லாயிரக் கணக்கான சங்கீத ரஸிகர்கள் தம்மை மறந்து ரஸித்து அனுபவிக்கும் தியாகராஜ கீர்த்தனைகள் ஆகும். இப்படி நம் இதயத்தோடு இதயமாக ஒட்டிவிட்ட கர்நாடக சங்கீதத்தை தம் இதயத்திலிருந்து வாரி வழங்கிய வள்ளல் ஸ்ரீ தியாகராஜர் பாடிய கீர்த்தனைகளைக் கர்நாடக சங்கீத பொக்கிஷமாகக் கருதுவதில் ஆச்சரிய மென்ன? கர்நாடக சங்கீதத்தில் உண்மையாகப் பற்றுக் கொண்டவர்கள் ஸ்ரீ தியாகராஜருக்குத் தமிழ் நாட்டில் நினைவு விழா கொண்டாடுவது மிகவும் பொருத்த மானதாகும்.

## அவர் வாழ்ந்த வரலாறு

பக்தியிற் சிறந்த ஒரு சங்கீத மரபில் பிறந்தவர் ஸ்ரீ தியாகராஜர். பிறவியிலேயே நல்ல சாரீர சம்பத்தைப்

படைத்திருந்தார். அவரது பக்குவத்தைப் பார்த்த பிரபலமான சங்கீத வித்வான் ஸொண்டி வெங்கடரமணய்யா என்பவர் அவரைத் தம் சிஷ்யராக ஏற்றுக்கொண்டார். பல பிறவிகளில் இசைக் கலையை அப்பியசித்த பயனே போல வெகுசீக்கிரத்தில் சங்கீத சாஹித்தியத்தின் நுட்பங்களையும் சம்பிரதாய வழிகளையும் தியாகராஜர் அறிந்து கொண்டார். இடையே அவரது பக்தியும் பழுக்க ஆரம்பித்துப் பல ஆசிரியர்களிடம் உபதேசம் பெறும் பாக்கியத்தையும் பெற்ருர் அவர். குல தெய்வமாகிய இராமனிடத்தில் அவருக்கிருந்த பக்தியின் பயனுக காஞ்சியிலிருந்த உபநிஷத் பிரமம் என்பவரிடத்தில் முறைப்படி ராமநாமத்தை உபதேசம் பெற்ருர். தொண்ணூற்று ஆறு கோடி ராம நாமத்தை ஜபம் செய்து முடிப்பது என்று விரதம் பூண்டு தினந்தோறும் சில லக்ஷங்கள் என்று முறையாகத் தமது விரதத்தை முடித்துக் கொண்டார். இராமனை எப்போதும் தியானம் செய்து வந்த பழக்கத்தினுல் பக்கத்திலேயே இராமன் இருப்பது போல நினைத்து அவரிடம் பேசுவது போல பல சாஹித்தியங்களைச் செய்தார். அவரது பாடல்களில் பெரும்பாலும் சாந்த ரஸமே பிரதானமாக விளங்குகிறது. சில சமயங்களில் அவரது பாடல்களில் பாமரரைப் பார்த்து இரங்குதலும், வேஷதாரிகளைப் பார்த்து கண்டிப்பதும், வாழ்க்கையில் சோதனை ஏற்படும் போது இராமனுடைய அருளை வேண்டிப் பாடுவதும் உண்டு. இப்படிப்பட்ட பாடல்களிலேயே கருணைரஸம் முதலிய மற்ற ரஸங்களையும் காணலாம்.

**மன்னனும் மகானும்**

தமது சாஹித்திய வரப்பிரஸாதத்தை (Poetical gift) ஆண்டவனுக்கேயன்றி வேறு எவருக்கும் ஸ்ரீ தியாகராஜர் சமர்ப்பிக்கவில்லை. மன்னன் சரபோஜி அவரது சங்கீதத்தின் பெருமையைக் கேள்விப் பட்டான். அவரது கலைக்கு

ஆதரவாக பொன்னும் பொருளும் வைத்துத் தனது பரிசாக அவரிடம் அனுப்பித் தன் ஆஸ்தானத்துக்கு விஜயம் செய்யும்படி அவரை வருந்தியழைத்தான்.

ஸ்ரீ தியாகராஜருக்கு மன்னன் செய்கை பெரும் சோதனையாக ஆயிற்று. அவர் மனத்துக்குள் ஒரு பெரும் போராட்டமே நடந்தது. அந்தப் போராட்டத்தின் வெளியீடே 'நிதி சாலசுகமா?' என்று இப்போது நாம் பாடும் பிரபலமான கல்யாணி ராகக் கீர்த்தனையாகும். 'ராமன் சந்நிதிக்கு முன்பிருந்து கொண்டு சேவை செய்வது சுகமா? அல்லது மன்னன் அனுப்பி வைத்த பொன்னையும் பொருளையும் ஏற்று அனுபவிப்பது சுகமா? ஏ மனமே! நிஜத்தை நீ சொல்லு' என்று அவர் தன்னைத் தானே கேட்டுக் கொண்டார். அதைத் தொடர்ந்து கீர்த்தனையின் சரணத்தில் தன் நாவைப் பார்த்துக் கேட்கிறார். 'ராமநாமத்தில் உனக்கு ருசியா? அல்லது தயிர், பால், வெண்ணெய் போன்ற உணவுப் பதார்த்தங்களில் ருசியா?' என்பதே அந்தக் கேள்வி. 'மதம் பிடித்த மனிதனைப் பற்றி புகழ்ந்து பாடுவதில் உனக்கு ருசியா? அல்லது ராம பிரானைப் பாடுவதில் ருசியா?' என்று கேட்டு முடிக்கிறார்.

அவருடைய ஆத்ம சோதனையில் அவர் வெற்றி பெற்றார். அவர் கேட்ட கேள்விகளுக்கு அவருக்குப் பதில் கிடைத்தது. அதன் பலனாக மன்னன் சரபோஜியின் முயற்சி வீணாகப் போயிற்று. அந்தப் பொன்னும் பொருளும் மன்னனிடமே திரும்பி வந்து சேர்ந்தன.

## பக்திப் பித்து

இணையற்ற இசைச் செல்வம் இருந்தும் சரளமான சாஹித்திய செல்வம் இருந்ததும் அவற்றின் உதவியால் ஸ்ரீ தியாகராஜர் தம் குடும்பத்தின் ஏழ்மை நிலையைப்

போக்க இசையவில்லை. ஸ்ரீ தியாகராஜரின் இந்தப் பிடிவாதமான மனப்போக்கைத் திருப்பிவிட பலவிதமாக அவரது மூத்த சகோதரர் முயன்றும் அவை பலன் தரவில்லை. ராமவிக்கிரஹம்தான் அவரிடம் இப்படிப்பட்ட பக்திப் பித்தை உண்டாக்கியிருக்கும் என அவர் முடிவுக்கு வந்தார். ஒரு நாள் நள்ளிரவில் ஸ்ரீ தியாகராஜர் பூஜித்துவந்த ராமவிக்கிரஹத்தை அவர் எடுத்துவந்து காவிரியின் ஜலப் பிரவாகத்தில் எறிந்து விட்டார். தமது அன்புக்கெல்லாம் உறைவிடமாகிய ராமவிக்கிரஹத்தைக் காணுமல் ஸ்ரீ தியாகராஜர் புலம்பித் தவித்தார். அப் புலம்பலே 'எந்த தாகினுடோ' என்ற கருணு ரஸம் நிறைந்த கிருதியாக நமக்குக் கிடைத்திருக்கிறது. இராமனது அருளினுல் பிரவாஹம் வடிந்த பிறகு மணலுக்குள் விக்கிரஹம் புதைந்திருந்த இடம் அவருக்குப்புலப்பட்டது. விக்கிரஹம் திரும்பக் கிடைத்ததும் மகிழ்ச்சி தாங்காது 'கனுகொண்டினீ' என்று ஸ்ரீ தியாகராஜர் பாடினுர்.

இப்படியே பாடிக் கொண்டே தம் வாழ்நாட்களைக் கடத்தினுர். தம் வாழ்நாள் முழுதும் ஒருவரையும் யாசிப்பதில்லை என விரதம் பூண்டு தாமாக 'உஞ்ச விருத்தி' என்னும் உயர்ந்த வாழ்க்கை முறையைச் சங்கோசமில்லாமல் ஏற்றுக் கொண்டு வாழ்க்கையை நடத்தினுர். கடைசியில் சந்நியாசம் பெற்றுக் கொண்டு இராமன் பாதங்களை அடைந்தார்.

## இசையுலகில் ஜனநாயகம்

சங்கீதப் பயிற்சி என்ருல் ஒரு சிலரே அதற்கு முன் வந்த காலம் ஒன்று உண்டு. இப்பொழுதோ சங்கீதத்தில் யாவரும் பயப்படாமல் பயிற்சிபெற முன் வருகிருர்கள். இதற்குக் காரணம் கர்நாடக சங்கீதத்தில் பல சுலபமான வழிகளை ஸ்ரீ தியாகராஜர் கற்பித்து யாவரும் சுலபமாகக்

கற்கும்படியான மெட்டுக்களில் கீர்த்தனைகளை அமைத்திருப்பதுதான். சங்கீத உலகில் ஜனநாயகத்தை ஸ்தாபித்தவர் ஸ்ரீ தியாகராஜர் என்று குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானது.

## அவரது கீர்த்தனைகள்

அவரது கீர்த்தனைகளில் உள்ள கருத்துக்கள் ஒவ்வொன்றும் உபநிஷத் வாக்கியங்களின் உட் கருத்தே அன்றி வேறல்ல. இக்காரணம் பற்றியே அவரது கிருதிகளை 'தியாகோபநிஷத்' என்று பெரியோர்கள் கூறுகின்றனர். அப்படி உயர்ந்த பொருளையும் எளிய வழியில் யாவரும் புரிந்து கொள்ளக் கூடிய சொற்களால் விளக்கியிருக்கிறார். அவர் அனுஷ்டித்து வந்த ஓர் தனியான யோகத்தைப் பற்றி பல இடங்களில் பல கிருதிகளில் சொல்லியிருக்கிறார். அதுவே தியாகராஜர் அப்பியசித்த சங்கீத யோகம் ஆகும். 'சங்கீதமே மோக்ஷத்திற்கு எளிய பாதை' என்பது யோகிகளில் சிறந்த யாக்ஞவல்கியர் வாக்கு. அதை அனுசரித்தே ஸ்ரீ தியாகராஜர் சங்கீதத்தைப் பக்தியோடு சேர்த்து ஒரு யோகமாக அனுஷ்டிக்கும் நவீன முறையைக் கையாண்டார்.

சங்கீதம் இல்லாமல் நாம ஜபம் செய்வதுதான் சரியான வழி, நிஜமான பக்தி என்று அவர் காலத்தில் சிலர் அபிப்பிராயங் கொண்டிருந்தனர். அதைக் கண்டித்து ஸ்ரீ தியாகராஜர் 'இந்த சௌக்யமு' என்ற காபி ராகக் கிருதியில் 'சங்கீதத்தோடு பஜனை செய்யும் சுகம் அதை அனுபவிப்பவர்களைத் தவிர வேறு யாருக்குத் தெரியும்?' என்று கேட்கிறார். 'பக்தி இல்லாத சங்கீதம் சன்மார்க்கத்துக்கு உதாவது' என்று 'சங்கீத ஞானமு' என்ற தன்யாசி கீர்த்தனையில் எச்சரித்திருக்கிறார். அவர் காலத்தில் சிவ நாமம், இராம நாமம் இவைகளை ஜபம் செய்வது யாவரும்

கையாண்டு வந்த பழக்கமாக இருந்தது. அவர்களில் நிஜமான பக்தியோடு இராமஜபம் செய்தவர்கள் மிகச் சிலரே. மற்றவர்கள் எல்லாம் பிறருக்காகவும், எண்ணிக்கைக்காகவும் யந்திரம் போல் ஜபம் செய்து தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டனர். ஸ்ரீ தியாகராஜர் 'ராமநீயெட' என்ற அழகான தொரு பாடலில் இப்படிப்பட்ட வேடதாரிகளை அம்பலப்படுத்துகிறார். 'ஸ்திரீ வேடம் போட்ட ஆடவருக்கு பதிவிரதையின் மனோபாவம் தெரியுமா?' 'பசுவேடம் தாங்கிய புலி கன்றுக் குட்டிக்குப் பால் கொடுக்குமா?' என்ற உவமைகள் வேடதாரிகளைத் தாக்கும்படி அமைந்திருக்கின்றன.

தியாகராஜரின் கீர்த்தனைகளைப் பாடுபவர்கள் அவற்றின் பொருளை அறிந்து கொண்டு பாடவேண்டும். அவரது கீர்த்தனையின் முதுகெலும்பு பக்தி. ஆகவே பக்தியை போஷிக்க தியாகராஜர் கீர்த்தனைகளைப் பாடவேண்டும். 'பக்தி இல்லாத சங்கீதம் வேர் இல்லாத மரம் போல' என்ற வாக்கில் தான் தியாகராஜரின் சித்தாந்தமே பொதிந்து கிடக்கிறது. இதை கர்நாடக சங்கீத வித்வான்களும் ரஸிகர்களும் நினைவில் வைத்துப் போற்ற வேண்டும்.

# பிரிட்டனில் அவசரச் சட்டப் பிரகடனம்

---

பிரிட்டனில் ரெயில்வே ஊழியர்கள் வேலைநிறுத்தம் ஆரம்பித்திருப்பதால், நிலைமையைச் சமாளிக்க சர்க்கார் அவசரச்சட்டப் பிரகடனம் செய்திருக்கிறது. அவசரச் சட்டப் பிரகடனம் முன்னெச்சரிக்கையான நடவடிக்கை தான். "அவசரம்" என்ற வார்த்தை மருட்சியைத் தருகிறது. எதிர்பாராது நெருக்கடிகள் ஏற்பட்டு சகஜ வாழ்க்கைக்கு ஊறு ஏற்பட்டால், நிலைமையைச் சமாளிக்கவே, அவசரச் சட்டம் உருவாயிற்று. 1920 இல் அவசரச் சட்டம் நிறை வேற்றப்பட்டது. முதல் மகாயுத்தத்திற்குப் பிறகு நாட்டி லிருந்து அசாதாரண நிலைமையைக் கவனித்து சர்க்கார், திடீரென நெருக்கடி ஏற்பட்டு, மக்களின் தினசரி வாழ்க் கைக்குப் பங்கம் நேர்ந்தால் சமாளிப்பதற்காக அவசரச் சட்டம் இயற்றினார்கள். இதே அவசரச் சட்டம்தான் இப்பொழுது பிரயோகிக்கப்படுகிறது.

நெருக்கடி

அவசரகாலம் அல்லது நெருக்கடி என்பதை எப்படி நிர்ணயிப்பது? வீட்டில் ஏற்படும் வசதிக் குறைவு, அல்லது மோதலும் நெருக்கடிதான்; யுத்த நிலைமையால் நாட்டின் பொருளாதாரம் நிலைகெட்டு ஆறு ஆண்டுகாலம் மக்கள் தவித்ததும் நெருக்கடிதான். நாட்டில் நெருக்கடி ஏற்படும் போது, சில விசேஷ அதிகாரிகளின் மூலம் மக்களுக்குப் பணியாற்ற சர்க்கார் நடவடிக்கை யெடுத்துக் கொள்கிறது. ஆனால் யுத்த கால நிலை வேறு, சமாதான கால நிலை வேறு.

சென்ற முப்பத்தைந்து ஆண்டுகளில் நாலே நாலு தடவைகளில்தான் இந்த அவசரச் சட்ட அமுல் நடந்திருக்கிறது. 1921 இலும் 1926 இலும் பொதுவேலை நிறுத்தம் நடந்தபோதும் 1948 இலும் 1949 இலும் துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தபோதும் அவசரச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. நெருக்கடி தீர்ந்ததும் சட்டமும் வாபஸாயிற்று.

பிரிட்டிஷ் மக்களுடைய வாழ்க்கையில் நியதியும் நிர்ணயமும் உண்டு. நெருக்கடியை அல்லது அவசரச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து சமாளிக்கச் சட்டங்கள் செய்யப்படவில்லை. உதாரணமாக, விசேஷப் பிரகடனமின்றி பொதுப் பிரயாணவண்டிகளில் அளவுக்கு மீறிப் பிரயாணிகளை ஏற்றிச் செல்ல முடியாது; சாமான்கள் ஏற்றிச் செல்லும் வண்டிகளை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்த முடியாது. மின்சாரம் அல்லது எரிவாயு விநியோக விதிகளை மாற்றவோ, கட்டுப்பாடு செய்யவோ முடியாது.

**பிரகடனம்**

சகஜ வாழ்க்கைக்குக் குந்தகமேற்படும் போது, நிலைமையைச் சமாளிக்கவும் மக்களுடைய அத்யாவசிய வசதிகளைக் கவனிக்கவும், விசேஷ அதிகாரப் பிரகடனம் செய்யப்படும். ராஜாங்க சபையை (ப்ரீவி கௌன்சில்)க் கலந்துகொண்டு மகாராணி அவசரக் காலப் பிரகடனம் செய்வார்கள். 1895 இல் பிரீவி கௌன்சில் அமைக்கப்பட்டது. தேசபரிபாலனத்தில், மன்னருக்கு அடுத்தபடியாக உரிமை பெற்ற சபை இது. இந்தச் சபையில் ஒரு சில பிரமுகர்களும் முக்கிய மந்திரிகளும் அங்கம் வகிக்கிருர்கள்.

இந்தத் தடவை, மகாராணி ஸ்காட்லந்திற்கு விஜயம் செய்த போது, அவசரக் காலப் பிரகடனம் செய்யவேண்டியதாயிற்று. மந்திரிகளும், பிரீவி கௌன்சில் அங்கத்

தினர்களும் சட்டசபைக் காரியதரிசிகளும் ஸ்காட்லந்திற்குப் பறந்துசென்று மகாராணியைக் கலந்து ஆலோசித்தார்கள். பிரகடனத்தின் மூலம் சர்க்காருக்குத் தனி உரிமைகள் கிடைத்தாலும், பாராளுமன்றத்தின் அங்கீகாரமும் அவசியம். எதேச்சாதிகாரமாக உத்தரவுகளைப் போட்டுவிட முடியாது. பார்லிமெண்டின் இரு சபைகளும் அங்கீகரிக்காத உத்தரவுகள் ரத்தாகிவிடும்.

இப்போது பார்லிமெண்டு கலைக்கப்பட்டிருக்கிறது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் 7-6-55 இல் வெஸ்ட்மின்ஸ்டருக்கு வந்து விசுவாசப்பிரமாணம் எடுத்துக் கொள்வார்கள். அவசரக்கால உத்தரவுகளுக்கு பார்லிமெண்டின் அங்கீகாரம், உடனே தேவையாகையால் 9-6-55 அன்று, பார்லிமெண்டைத் துவக்கிவைக்க மகாராணி சம்மதித்திருக்கிறார்கள்.

அத்யாவசியத் தேவைகளைச் சமாளிக்க, சாதாரண காலத்திலுள்ள சில கட்டுப்பாடு விதிகளைத் தளர்த்த சுமார் 25 உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள. இவற்றை, பார்லிமெண்டு அங்கீகரித்து விடும் என்பதில் சந்தேகமில்லை.

**சர்க்கார் நிலை**

புதுப் பார்லிமெண்டில், சர்க்கார் திட்டத்தைப்பற்றி மகாராணி சம்பிரதாயமாகக் குறிப்பிடுவதுண்டு. சென்ற தேர்தலின்போது தொழில்துறைக் கொள்கைகளைப் பற்றி எந்தக் கட்சியும் எதையும் தெளிவாகக் கூறிக் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. தேர்தல் காலத்தில் தொழிற்சிக்கல்கள் உருவாகிக் கொண்டிருந்ததால், புதுச் சர்க்காருக்கு அவற்றைச் சமாளிக்கவேண்டிய பொறுப்பு ஏற்படும் என்ற நிலையில், அரசியல் கட்சிகள் எச்சரிக்கையுடன் நடந்துகொண்டன.

மேலும் தொழில்துறையில் அமைதி நிலவுவதில் தொழிற் சங்கக் கௌன்சில் அக்கறை காட்டி வருவதால், இப்போதைய நெருக்கடிக்கு அரசியல் காரணங்களைக் கற்பிக்கமுடியாது. தொழிலாளர்களுடைய குறைகளில் இருந்து எழுந்த சிக்கல்கள்தான் இவை. எந்தக் காரணத்தால் ஏற்பட்டாலும், நிலைமையைச் சமாளிக்கும் பொறுப்பு சர்க்காரைச் சேர்ந்ததே. சர்க்காரும் பொறுப்புணர்ந்து தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

புதுப் பார்லிமெண்டு கூடும்போது, மக்களின்-தேசத்தின் • அத்யாவசியத் தேவைகளைச் சமாளிக்க, சரியான சமயத்தில் குறைந்தபட்ச அதிகாரத்தின் மூலம், தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருப்பதாக, ஸர் அந்தோணி ஈடனும் அவருடைய சக மந்திரிகளும் சபையில் கூற முடியும்.

# சித்திரகூடம் செல்வதும், மன்னனின் மறைவும்

சு. ராஜகோபாலன்.

இராமனையும் சீதையையும் காப்பதின் பொருட்டு இலக்குமணன் இரவு முழுவதும் ஊண் உறக்கமில்லாமல் இருப்பதைப் பார்க்க குகனுக்குச் சகிக்க முடியவில்லை. அப்பணியைத் தன் பரிவாரங்களுடன் தான் செய்பத் தயார் என்று மன்றாடிக் கேட்டான். ஆனால் இலக்குமணன் இணங்கவில்லை. தசரத மன்னன் புதல்வன், பூமிக்கதிபதி பூமியில் படுத்துறங்கும் போது, தனக்குச் சுகமேது என்று சொன்னான். அன்றிரவு முழுவதும் குகனுடன் அரண்மனை யில் நடந்தவைகளைப் பற்றி சல்லாபித்தான். இருவரும் மிகுந்த துக்கத்தில் ஆழ்ந்தனர். ஜுரத்தில் வாடும் யானை போல் இருந்தது அன்று அவன் நிலை.

மறுநாள் காலை அவர்கள் கங்கை நதியைத் தாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இராமன் சுமந்திரனை அயோத்திக்குத் திரும்புமாறு கேட்டுக் கொண்டான். ஆனால் சுமந்திரன் சிறிதும் இணங்கவில்லை. இராமனுக்கு ஏற்பட்ட கஷ்டத்தை நினைத்து நினைத்து ஏங்கினான். வெகு வாகப் பிரலாபித்தான். "உங்களுக்கு ஏற்பட்ட இவ் வன வாசம் தர்மத்திற்கே விரோதமானது. பிரம்மசரியம், வேதம் ஓதுதல், புலனடக்கம், மெய் வாழ்க்கை, இவை பயனற்றவையாயின. ஆனால் பரவாயில்லை, நீங்கள் மூவரும் வனத்திலிருந்து கொண்டே மூவுலகையும் ஜயிக்க முடியும்.

நாங்கள் மட்டும் கைகேயியின் அரசாட்சியிலிருந்து கொண்டு தவிக்கப்போகிறோம்" என்றெல்லாம் சொல்லி அழுது விட்டான். இராமனும் உணர்ச்சி வசப்பட்டவன் ஆயினன். பிறகு சுமந்திரனை எப்படியும் அயோத்திக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அயோத்தியில் வெகு காரியங்கள் செய்தாகவேண்டும். அரசனைச் சமாதானப் படுத்தவேண்டும். தன் தாய்மார்களிடமும் கைகேயியினிடமும் தான் வனவாசத்தினால் பாதிக்கப்படவில்லை என்று சொல்ல வேண்டும். வெகு சீக்கிரமாக பரதனை வரவழைத்து யுவராஜாவாக ஏற்படுத்த வேண்டும். ஆகையால் சுமந்திரன் அங்கு செல்வது முக்கியம் என்றான்.

சுமந்திரனோ அயோத்தி செல்வதை சிறிதும் விரும்பவில்லை. பதினான்கு வருஷங்களும் இராமனுடன் வனத்திலேயே இருக்கவேண்டும் என்பது அவன் அவா. வேறு சில காரணங்களையும் சொன்னான். "நான் அயோத்திக்கு வெறும் தேருடன் செல்ல மாட்டேன். ஜனங்கள் இராமனற்ற தேரை நான் ஓட்டி வருவதைப் பார்த்து என்னை ஏசுவார்கள். யுத்தவீரன் மரித்தபின், அவன் தேரைக் காணுந்தோறும் சேனைகளுக்கு ஏற்படும் துக்கம் போல் இருக்கும் அயோத்யாபுரி மக்களின் மனநிலை. மேலும் நான் கௌசல்யையை எப்படிப் பார்த்து ஆறுதல் சொல்வேன். உன்னை மாமன் வீட்டில் வைத்திருக்கிறேன் என்று சொன்னால் நம்புவாளா? நான் உன்னை விட்டுப் பிரியேன். பதினான்கு வருஷங்களும் ஒரு நொடிப் பொழுதாக முடிந்து விடும். நீ சம்மதிக்காவிடில் இதோ பார் தேருடன் நெருப்பில் குதித்து விடுவேன். உனக்காக இந்திரலோக வாழ்க்கையையே துறக்கத் தயாராக இருக்கிறேன். நீ என்னைத் தடை செய்யாதே. மேலும், உனக்கு, உன்னிடம் பணி செய்வோரிடம் பாசம் உண்டு என்பது லோகப்பிரசித்த

மானது. ஆகையால் என்னைப் புறக்கணிக்காதே" என்று அழுது கொண்டு சொன்னான்.

இராமனுக்கு ஒன்றும் புரியவில்லை. பெரிய சங்கடத்தில் அகப்பட்டு கொண்டு விட்டோம் என்று தோன்றிற்று. ஒரு யுக்தியைக் கையாண்டான். சுமந்திரனையும் இணங்கும்படி செய்துவிட்டான். தான் வனவாசம் மேற்கொண்டு விட்டது கைகேயிக்குத் தெரிய வேண்டும். அவள் சந்தேகப் படுவாள். இராமன் வனத்திற்குச் செல்லவில்லை என்றுதான் சாதிப்பாள். சுமந்திரன் போன்றவர் அவளிடம் சென்று உண்மையைச் சொன்னால் தான் நம்புவாள். ஆகையால் சுமந்திரன் அயோத்திக்கு உடன் செல்வது அவசியம் என்று சொன்னான். சுமந்திரனும் சம்மதித்து அயோத்திக்குத் திரும்பிச் சென்றுவிட்டான்.

பின்னர், இதே போல் ஏனையோரும் நிர்ப்பந்தம் செய்யக் கூடும் என்று அஞ்சி, இராமன் குகனிடம் தனது இஷ்டத்தை வெளியிட்டான். "அன்புடையோனே! நான் என் வாக்குறுதியைக் காப்பாற்றவேண்டும். தவ வாழ்க்கையை ஏற்கவேண்டும். ஆதலின், நான் இனிமேல் ஜனக்கூட்டத்தில் இருக்கக் கூடாது. தவக்கோலம் அணியவேண்டும். அதற்கென விதிகளையும் புறக்கணிக்கக் கூடாது. முக்கியமாக ஜடை தரித்துக்கொள்ள வேண்டும். ஆலம்பாலால் ஜடை தயார் செய்யவேண்டும்" என்று சொல்ல, குகனும் ஆலம்பால் கொணர்ந்தான். பிறகு இரு சகோதரர்களும் ஜடை அலங்காரம் செய்து கொண்டு முனிவர்களை ஒத்தனர். குகனுக்கு விடை கொடுத்தாயிற்று. ஓடம் ஏறிக் கங்கைநதியைத் தாண்ட ஏற்பாடு செய்தனர். ஓடத்திற்குள் செல்லுமுன் நதிக்குரிய வழிபாடுகளைச் செய்தனர். நதியின் நடுவில் வந்தனர். அவ்வமயம் சீதாதேவி கங்கை நதியை நோக்கிப் பின்வருமாறு அஞ்சலி செய்தாள்;

கங்கைநதியே! தசரதமன்னன் குமாரனைக் காப்பாற்ற வேண்டும். பதினன்கு ஆண்டுகள் நாங்கள் காட்டில் கழித்துவிட்டு சௌக்கியமாய் திரும்பிவர வரமருள வேண்டும். நாங்கள் அரசை அடைந்தபின் நூறு ஆயிரம் பசுக்களையும் அறுசுவை உணவுகளையும் உடை வகைகளை யும் தவமுடையோருக்குக் கொடுக்க ஏற்பாடு செய்வேன். உனக்குப் பூசனை செய்வேன்" என்றாள். பின்னர் இராமன் இலக்குமணனை அனுகிச் சீதையைக் காக்கும் உபாயத்தை வெளியிட்டான். அடவியில் செல்லும்போது முதலில் இலக்குமணன் செல்ல வேண்டும்; பின்னர் சீதை; இவர் களைப் பின்பற்றி இராமன் போகவேண்டும் என்று ஏற் பாடு ஆயிற்று.

அன்று காட்டில் முதல் இரவு. சுமந்திரனும் இல்லை. இராமனும் இலக்குமணனும் இரவில் வெகு நேரம் தூங்க வில்லை. இதுவரை நடந்ததையும், இனி நடக்க விருப்பதை யும் பற்றி சித்தித்த வண்ணமிருந்தான் இராமன். இலக்கு மணனைப் பார்த்துச் சொன்னான்; "அயோத்தியில் இன்று அரசன் துக்கத்துடன் இருப்பார். கைகேயியோ களிப்புடன் உலாவுவாள். என்னைத் துறந்த மன்னவனின் கதி என்ன வாயிற்றோ? நான் இன்று காட்டில் சிரமப்படுவது, அதனால் அரசனுக்கு ஏற்பட்ட மதிமயக்கம் இவைகளை நோக்குங் கால், ஓர் உண்மை புலனாகிறது. இவ்வுலகினில், அறம், பொருளை விட காமமே வலிவுடையதாக இருக்கிறது. கைகேயியின் வசமான நம் தந்தையின் கதி என்ன? பரதன் பூர்ணப்பொலிவுடன் கோசல நாட்டை அரசு செலுத்தப்போகிறான். அறத்தையும் பொருளையும் துறந்து, காமத்தையே கருதுவோருக்கு நம் பிதா ஒரு படிப்பினை ஆவார். மேலும் கைகேயி, மன்னனுடைய உயி ரைக் கவர்வதற்கும், என்னைக் காட்டுக்கு அனுப்புவதற்கும், பரதனுக்கு அரசு வாங்கிக் கொடுப்பதற்கும் இப்புவியில்

தோன்றினுள் போலும். ஆனுல் இத்துடன் அவள் நின்று விடுவாள் என்று எனக்குத் தோன்றவில்லை. எனக்குக் கவலையாகவுமிருக்கிறது. அவள் என் தாயையும், உன் தாயையும் துன்புறுத்தப் போகிருள். ஆகையால் நீ அயோத்திக்கு உடன் செல்வது தான் நியாயம். நான் மட்டும் சீதையுடன் தண்டகாவனம் செல்கிறேன். கௌசல்யை பாக்யமற்றவளாய் விட்டாள். புத்திரன் இருந்தும் அவளை ஆபத்துகளினின்று காக்க வகையில்லை. என் போன்ற செயலற்ற பிள்ளையிருந்து அவளுக்கு யாது பயன்? அவள் கூடவிருக்கும் கிளிப்பிள்ளை அவளுக்கு என்னைவிட உபயோகமுள்ளதாக இருக்கிறது. ஒரு வேளை முன் பிறவியில் அவள் தாயையும் சேயையும் பிரித்துவைத்திருப்பாள். நிற்க, எனக்குக் கோபமுண்டானுல் அயோத்தியையும், ஏன் இந்த உலகம் முழுவதையும் அதம் செய்துவிடுவேன். ஆனுல் சில காரணங்களினுல் அவ்வாறு செய்யத் துணியவில்லை. தர்மம் அற்ற வழியில் வீரத்தை உபயோகிக்கக் கூடாது. நான் தர்மத்திற்கு அநுரசணையாக இருக்கவேண்டும். பரலோகத்திற்கும் வழிதேடவேண்டும். இதனுல்தான் நான் அரசை விரும்பவில்லை" என்று இராமன் தன் மனத்தில் உள்ளதை ஒளிக்காமல் வாய்விட்டுச் சொல்லிவிட்டான். அவனது மனோ நிலை, பெரும் ஜ்வாலைகள் கக்கியபின் மெலிந்து எரியும் நெருப்பையும், அலைகளின் வேகம் அடங்கியபின் உள்ள சமுத்திரத்தையும் ஒத்திருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இலக்குமணன் இராமனைச் சமாதானப்படுத்த வேண்டியதாயிற்று. இராமனைத் தேற்றினுன். "நீ துக்கப்படுவது சரியல்ல. நீயே துக்கத்திற்கு வசமானுல், நானும் சீதையும் யாது செய்வோம். நிற்க, நான் உன்னை விட்டு விட்டு அயோத்தி செல்வது முடியாத காரியம். நீயன்றி நானே சீதையோ

உயிர்வாழ்வது கஷ்டம், ஜலத்தை விட்டுத் தரையில் போடப்படும் மீன்கள் போல் ஒரு க்ஷணமும் ஜீவித்திரோம். உனக்காக நான் என் உடன் பிறந்தவனையும், என் தாயையும் துறந்துவிட்டிருக்கிறேன். ஏன் சுவர்க்கலோகம் போகவும் விரும்பேன்'' என்றான்.

பிறகு மரத்தினடியில் இருவரும் படுத்தனர். பொழுது புலர்ந்து பிரயாணத்தை மீண்டும் துவங்கினர். கங்கையும் யமுனையும் சேருமிடத்தை நாடினர். போகும் வழியில் இயற்கையின் அழகு அவர்களை வசீகரித்தது. எங்கும் நூதன காட்சிகள். கொஞ்சதூரம் சென்றபின், ஓர் இடத்தில் வேள்விப் புகை தென்பட்டது. அது பாரத்வாஜ முனிவரின் ஆசிரமம். அங்கு பல முனிவர்கள் அக்கினியை வணங்கிக்கொண்டிருந்தனர். இராமனும் இவர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டான். பின்பு வெகுவாக உபசரிக்கப்பட்டான். அவ்விடமே இருக்குமாறு அவர்கள் வேண்டிக் கொண்டனர். ஆனால் இராமன் இணங்கவில்லை. காரணத்தையும் தெரிவித்தான். தான் அவ்விடம் இருப்பது தெரிந்தால் ஜனங்கள் கூடிவிடுவர்; முனிவர்கட்கும் சிரமம் ஏற்படும் என்று சொன்னான். அவர்களும் இராமன் அவ்விடத்தை விட்டுச் செல்வதற்குச் சம்மதித்தனர். பிறகு அவ்விடத்திற்குச் சிறிது தூரத்திலிருக்கும் சித்திரகூடமலை அவனுக்கு வசிப்பதற்குத் தகுதியானது என்று சொன்னார்கள். அது மிக்க மகிமை வாய்ந்தது. மானிடர்களுக்குப் பார்த்தமாத்திரத்திலேயே மோனத்தை அளிக்க வல்லது. மேலும் அவ்விடத்தில் முனிவர்கள் பலர் தவத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் என்றனர்.

அன்றிரவு பாரத்வாஜரின் ஆசிரமத்தில் தங்கிவிட்டு, மறுநாள் காலை அவர்கள் சித்திரகூடபர்வதத்தை நோக்கிச் சென்றனர். போகுமுன் முனிவர்களை வணங்கி விடை பெற்றுகொண்டனர். அங்கு அவர்களிடம் சல்லாபித்தது

ஒருநாள் தான் எனினும் அவர்களுக்குள் தகப்பனுக்கும் தனையனுக்குமுள்ள பாசம் ஏற்பட்டுவிட்டது. இராமனை வெகு தூரம் தொடர்ந்தனர். பிறகு யமுனைநதியை அடைந்தனர். அதைக் கடப்பதற்காக ஒரு தெப்பம் கட்டினர். அதில் சீதைக்கெனத் தனியாக ஒரு சுகமான ஆசனம் ஏற்படுத்தப்பட்டது. அவள் அதில் உட்கார்ந்தபின், இராமனும் இலக்குமணனும் ஏறிக்கொண்டனர். நதியின் மத்தியில் சீதை நதிக்கு அஞ்சலி செய்தாள். நதியைத் தாண்டிய பின், ஒரு பெரிய காட்டில் பிரவேசித்தனர். ஒரு பெரிய ஆலமரம் தென்பட்டது. அதை சீதை வணங்கினுள்: அங்கு சென்ற விடமெல்லாம், மரங்கள், செடிகள்,மலர்கள், பழங்கள் நூதனமாக வனப்புடன் தென்பட்டன. தேன்பொழியும் கூண்டுகள், மயில்கள், பறவைகள், புல்லினங்கள், மதம்கொண்ட யானைகள் இவர்களுக்கு கண்கொள்ளாக் காட்சிகளாக அமைந்தன. மலை அடிவாரத்தைச் சேர்ந்தனர். அருகிலிருக்கும் வால்மீகி முனிவரின் ஆசிரமத்தைக் கண்டனர். உள்ளே சென்றதும், முனிவரை வணங்கினர். ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துகொண்டனர். இராமனுக்கு அவ்விடமிருப்பதே நலம் என்று தோன்றிற்று. தனக்கு வசிப்பதற்காக, தனியே ஓர் ஆசிரமம் கட்டுமாறு ஆக்ஞாபித்தான். இலக்குமணனும் உடன் மரக்கிளைகளைக் கொணர்ந்து, அவைகளினுல் ஒரு நேர்த்தியான இருப்பிடம் கட்டிவிட்டான். அங்கு புகுமுன் வாஸ்து சாந்தியும் விதி வழுவாமல் செய்தனர். சுற்றிலும் இருக்கும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தனர். தமக்கு ஏற்பட்ட இன்னல்களையும் ஒருவாறு மறந்தனர்.

இராமன் சித்திரகூடம் சென்றதை தூதுவர்கள் மூலமாக அறிந்தனர் குகனும் சுமந்திரனும். சுமந்திரனும் குகனிடம் விடைபெற்றுக்கொண்டு அயோத்திக்குச் சென்றுன் அந் நகரம் எங்கும் சூன்யமாயிருந்தது. களிப்பில்லை,

கலவரமும் இல்லை. ஒரு வேளை நகரமே சோக அக்கினியால் எரிக்கப்பட்டு விட்டதோ என்று தோன்றியது. ஜனங்கள் சுமந்திரனைச் சூழ்ந்தனர். இராமன் எங்கே என்று கேட்டனர். கங்கை நதியைத் தாண்டிவிட்டான் என்று கேட்டதும் அலறி விட்டனர். "நாம் இனி இராமனை என்று பார்ப்போம்" என்றனர். தானம், யாகம், விவாகம் முதலியன செய்யப்படும் இடங்களில் நாம் இனி அவனைக் காண முடியாதே என்றும் ஏங்கினர்.

சுமந்திரன் அரண்மனையை அடைந்தான். அந்தப்புர ஸ்திரீகள் அழுதுகொண்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் மற்றவரைப் பார்க்கமுடியவில்லை. கண்ணீர் நிரம்பிய கண்கள் பார்வையே பங்கமாய் விட்டது. அரண்மனையின் எட்டாவது அறையில் மன்னர் மதிமயங்கிப் படுத்திருந்தார். அரசன் சுமந்திரன் சொன்னதைக் கேட்டார். பூமிக்கரசன் துக்கம் தாங்காமல் பூமியிலேயே விழுந்து விட்டார். உடனே யாவரும் அவரைத் தூக்கி எடுத்தனர். தசரதன் பேசவேயில்லை. கௌசல்யையும் சுமத்திரையும் அவரை அணுகி, சுமந்திரனிடம் பேசும்படி சொன்னார்கள். 'ஏன் பயப்படுகிறீர்கள் கைகேயிதான் இங்கு இல்லையே' என்று ஏசினார்கள். கௌசல்யையும் துக்கமேலிட்டினால் கீழே விழுந்துவிட்டாள். இப்படி இவர்கள் அழ, எல்லோரும் அழ ஆரம்பித்தனர். நகரம் முழுவதுமே அழுகையில் ஈடுபட்டது.

மூர்ச்சை தெளிந்ததும் அரசன் சுமந்திரனைப் பார்த்து இராமனது வன வாழ்க்கைகளைக் கேட்டார். தனக்கு என்ன சொல்லி அனுப்பினான் என்றார். சுமந்திரனும் கூறத் தொடங்கினான், 'இராமன் சொன்னதாவது:—என் தகப்பன், தாய்மார்களுக்கு அஞ்சலி செய்கிறேன். அரசனிடம் சொல்லுங்கள் எப்பொழுதும் அறநெறியைக் காப்பாற்றவேண்டும். வேள்விகள் உரியகாலத்தில் நடைபெற

வேண்டும். தாய்மார்களை கௌரவிக்கவேண்டும். கைகேயியைப் புறக்கணிக்கக் கூடாது. பரதன் அரசனை அனுசரித்தே அரசு செலுத்த வேண்டும். கௌசல்யையைத் தன் தாய்போலக் கருத வேண்டும்.' இலக்குமணன் சொன்னதாவது: இராமனைக் காட்டுக்கு அனுப்பியது மிகவும் அக்ரமம். ஏதோ தெய்வத்தினால் ஏற்பட்டது எனினும், அரசனே அதற்குப் பொறுப்பாளி. அரசனைக் குடிகள் இனி அன்புடன் கருதமாட்டார்கள். ஸீதை ஒன்றும் சொல்லவில்லை. ஏதோ திக்பிரமை பிடித்தவள் போல் தென்பட்டாள். என்னைப் பார்த்து ஒன்றும் சொல்லவில்லை. அழுதவண்ணம் இருந்தாள்.' என்று சொல்லி முடித்தான்.

சுமந்திரனும் தான் நேரில் கண்டதை விளக்கினான். இராமனது பிரிவினால் மனிதன் மட்டுமல்ல, மரங்கள், விலங்குகளும் துக்கவசப்பட்டன. குதிரைகள் கண்ணீர் விட்டன. மரங்கள் காய்க்கவில்லை. செடிகள் மலரவில்லை. துஷ்ட மிருகங்களும் வெளியில் செல்லவில்லை. தான் அயோத்திக்கு இராமனில்லாமல் வந்ததை ஜனங்களுக்குப் பார்க்க சகிக்கவில்லை. சுருங்கச் சொல்லின், கௌசல்யைக்கு ஏற்பட்ட துக்கத்தை நகரமே மேற்கொண்டது என்றான். தசரதனுக்கு துக்கம் தாங்கமுடியவில்லை. தான் பெரியவர்கள், சிநேகிதர்கள், மந்திரிகள் இவர்களைக் கேட்காமல் கேவலம் கைகேயி ஒருத்தியின் பேச்சைக் கேட்டுக்கொண்டு இக்காரியத்தைச் செய்தோமே என்று அலறினான். தம்மை உடனே இராமனிடம் கொண்டு சேர்க்குமாறு கெஞ்சினான், கதறினான். "ஆ ராமா, ஆ லக்ஷ்மணா, ஆ தபசில் வல்ல வைதேஹி! நான் கெட்டேன்" என்று கதறினான். மூர்ச்சையுற்று மீண்டும் கீழே விழுந்து விட்டான். கௌசல்யையும் பயந்து விட்டாள்.

பிறகு இராமனில்லாமல் தன்னால் ஜீவித்திருக்கமுடியாது என்றும் எப்படியாவது அவனிடம் கொண்டு போய் விட்டு விடுமாறும் வற்புறுத்தினார். சுமந்திரன் அவரைச் சமாதானப்படுத்தினான். "இராமன் இலக்குமணன் சீதை இவர்கள் அடவி வாழ்க்கையை அரண்மனை வாழ்க்கையைப் போல் கருதுகின்றனர். முக்கியமாக சீதை சிறிதும் கலவரமடையவில்லை. இராமனுடன் அயோத்தியில் அரண்மனையில் இருப்பது போல் விளையாடிக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு யானை, புலி, சிங்கம் முதலியவைகளினால் பயம் ஏற்படவில்லை. இராமனது புஜங்களே அவளை அவைகளினின்று காக்க வல்லன. ஆனதால் அவர்கள் பொருட்டு நீங்கள் யாதும் கவலைப்படவேண்டியதில்லை. அவர்கள் வாழ்க்கை சரித்திரம் என்றுமழியாப் புகழுடன் விளங்கப் போகிறது." என்று சொல்லித் தேற்றினான். ஆனால் கௌசல்யையின் துக்கம் சிறிதும் தணியவில்லை. அரசனைப் பார்த்துக் கடும் சொற்களை வாரியிறைத்தாள் "மூவுலகங்களும் உமது கருணையைப் போற்றுகின்றன. எப்படி உமக்கு மனம் வந்தது இராமனையும் சீதையையும் கானகம் அனுப்ப? சீதையோ வெகு இளம் வயது. சுக வாழ்விற்கு உரியவள். அவளுக்கு ஏனிந்தக் கொடுமை? ராஜ மாளிகையில் சதா சங்கீதம் கேட்டுக்கொண்டிருந்தவளுக்கு இனி காட்டில் உலாவும் சிங்கத்தின் கர்ஜனை தான் செவிக்குணவு. என் இருதயம் கல்லால் செய்யப்பட்டது போலும். இல்லாவிடில் இவை யாவற்றையும் பார்த்துக்கொண்டும் உயிரோடிருப்பேனா? மேலும் ஒரு விஷயம். ஏதோ இது கொஞ்ச காலத்திற்குத்தான், பதினைந்தாவது வருஷம் இராமன் இங்கே திரும்பி வந்து அரசு செலுத்துவான் என்று சொல்வதற்கில்லை. புலியானது வேறு மிருகத்தால் புசிக்கப்பட்டு மீதமான உணவைத் தீண்டுவதில்லை. ஒரு வேள்வியில் உபயோகப்படுத்தப்பட்ட பொருள்கள் மீண்டு

மொரு வேள்விக்குப் பயன்படா. சாரம் எடுத்த மதுவை யாரும் விரும்புவதில்லை. அதே போன்று பரதன் ஆண்டு அனுபவித்த அரசப் பதவியை இராமன் எள்ளளவும் விரும்பமாட்டான். இராமன் மனது வைத்தால் தனக்குத் தீங்கு செய்தவர்களை ஒரு நொடியில் சாம்பலாக்கி விடுவான். ஆனால் அதர்ம காரியம் செய்வதில் அவன் ஈடுபடான். ஜலத்தில் வாழும் ஜந்துக்கள் தங்கள் இனத்தைத் தாங்களே கபளீகரம் செய்வது போல் தகப்பனாக இருந்து கொண்டு நீங்கள் அவனுக்கு சொல்லொணாக் கஷ்டங்களை ஏற்படுத்தி விட்டீர்கள்'' என்றாள்.

இவ்வார்த்தைகள் மன்னவன் நெஞ்சத்தைப் பிளந்து விட்டன. மூர்ச்சித்து விழுந்துவிட்டான். பின்னர் மூர்ச்சை தெளிந்தது. அப்பொழுது முன்னாள் நடந்த சம்பவம் ஒன்று அவன் ஞாபகத்திற்கு வந்தது. மிகவும் சோகமான சம்பவம் அது. அச் சோகமும் தற்சமயம் இராமனது பிரிவால் ஏற்பட்ட சோகமும் சேர்ந்துகொண்டு அரசனைச் செயலற்றவனாக்கி விட்டன. எழுந்தான். கௌசல்யா தேவிக்கு அஞ்சலி செய்தான்; கெஞ்சினான். "ஏ தேவி! உலகமெல்லாம் உன்னை கருணை வாய்ந்தவள் என்று சொல்கிறார்கள். என்னிடம் கொஞ்சம் கருணை காட்டலாகாதா? பெண்பாலார்க்குக் கணவனே கண்கண்ட தெய்வம். அவன் குணமற்றவனாக இருப்பினும் அவனைப் போற்றுவது அறநெறி வழுவாத அணங்குகளுக்கு ஓர் அணிகலம். ஆகையால் நீ என்னைக் கோபிப்பது சரியல்ல'' என்றான்.

அரசனின் தணிவும், தணிந்த மொழிகளும் கௌசல்யையைத் தூக்கி வாரிப் போட்டன. தனது தவறை உடன் உணர்ந்து விட்டாள். அரசனது கைகளை எடுத்துக் கண்களில் ஒத்திக் கொண்டாள். மழை பெய்யும்போது ஏற்படும் ஜலதாரை போல் கண்ணீர் விட்டாள்.

"அரசனே! நான் பெருங் குற்றம் செய்துவிட்டேன். மன்னிக்க முடியாத குற்றம். கணவனுல் அஞ்சலி செய்யப்பட்ட அல்லது கெஞ்சப்பட்ட நாரீமணியை இவ்வுலகிலும் மேலுலகிலும் மதியார். நான் சோகத்தினுல் சொன்ன வார்த்தைகளை—என் சொல்லம்புகளைப் புறக்கணித்து விடுங்கள். சோகத்தினுல் ஏற்படும் தீமைகள் கணக்கற்றவை. கொடிது கொடிது சோக மனப்பான்மை. அது மனோதைரியத்தை நாசம் செய்கிறது. வேத நெறியையும், கெடுத்து விடுகிறது. ஏன் யாவற்றையும் அழிக்க வல்லமை உடையது. மானிடர்களுக்குச் சோகத்தைப் போன்ற சத்துரு வேறு கிடையாது. சத்துருவின் துன்பத்தையும் சகிக்கலாம். ஆனுல் சிறிதளவு துக்கத்தைச் சகிக்க முடிவதில்லை. இராமன் வனம் சென்று ஐந்தே நாட்கள்தான் ஆகின்றன. ஆனுல் ஐந்து ஆண்டுகள் ஆனது போலே தோன்றுகிறது. வேகமாக ஓடும் நதிகள் சமுத்திரத்தில் விழும்பொழுது சமுத்திரம் ஜலப் பிரவாகம் அடைவது போல எனக்கு ஏற்பட்டிருக்கும் துக்கம் என்னை வாட்டுகிறது" என்று சொல்லிப் புலம்பினுள்.

இரவு ஆரம்பித்தது அரசனும் அயர்ந்து தூங்கிவிட்டான். ஆனுல் சிறிது நேரம் கழித்ததும் விழித்துக் கொண்டான். நடுநிசி வேளை. கௌசல்யா தேவியைக் கூப்பிட்டு, முன்னுள் நடந்த சம்பவம் ஒன்றைச் சொன்னுன். அதன் படிப்பினையையும் முன் கூட்டியே சொல்லிவிட்டான்.

யாவரும் தங்கள் தங்கள் செயல்களின் பலனை அநுபவித்தே ஆகவேண்டும். நல்வினை நன்மை பயக்கும். தீவினை தீமையைக் கொடுக்கும். ஆகவே எவரும் முன் ஜாக்கிரதையாகத் தீய செய்கைகளில் ஈடுபடக் கூடாது. எதையும் தீர்க்காலோசனை செய்த பின்தான் ஆரம்பிக்க வேண்டும். தீர்க்கதரிசனம் வேண்டும். ஒரு மரத்தில்

கண்ணைக் கவரும் புஷ்பங்கள் இருக்கின்றன. மற்ருென்றில் புஷ்பங்கள் கிடையாது. ஆனுல் கனிகள் இருக்கின்றன. ஒருவன் புஷ்பத்திற்கு ஆசைப்பட்டு, கனியுள்ள மரத்தை வெட்டி அதற்குப் பதிலாக புஷ்பங்கள் உள்ள மரத்தைப் பயிரிடுவது மிக்க மதியீனம்.

தசரத மன்னனுக்குப் பாலியப் பருவத்தில் ஒருவித வல்லமை இருந்தது. அதற்கு "சப்தவேதி" என்று பெயர். அதாவது எந்த இடத்திலிருந்து சப்தம் வருகிறதோ அந்தப் பக்கமாக வெகு தூரத்திலிருந்துகொண்டு ஓர் அம்பை எய்தால், அது அவ்விடம்போய் அச் சப்தம் செய்யும் பிராணியைக் கொன்றுவிடும்.

ஒரு நாள் அவன் வேட்டையாட கானகம் சென்ருன். சரயூ நதிக்குச் சமீபம் சென்றுவிட்டான். அந்திப்பொழுது எங்கும் இருள் சூழ ஆரம்பித்துவிட்டது. நதியில் ஒரு குடத்தால் தண்ணீர் எடுக்கும் சப்தம் கேட்டது. அது ஏதோ ஒரு துஷ்ட மிருகத்தின் சப்தம் என்று எண்ணிஞன். உடனே முன் பின் யோசியாமல் ஓர் அம்பை எய்துவிட்டான். அம்பு முழு வேகத்துடன் சென்று அதன் வேலையைச் செய்துவிட்டது. உடனே ஒரு மனிதனின் அபாயக் குரல் கேட்டது. அரச குமாரன் நடுங்கிவிட்டான். அம்மனிதனின் வார்த்தைகளும் காதில் விழுந்தன. "நான் இவ்விடம் எனது அநாதையான தாய் தந்தையர்களின் தாங்க முடியாத தாகத்தைத் தீர்ப்பதற்காக தண்ணீர் கொண்டு போக வந்தேன். நான் வனத்தில் வசிப்பவன்; தவ வாழ்க்கையில் ஈடுபட்டு ஒருவருக்கும் பொல்லாங்கு செய்யாது வாழ்பவன். தவமுடையோனுகிய என்னை அம்பு போட்டுக் கொல்ல என்ன காரணம்? அதனுல் அவனுக்கு யாது பயன்? நான் சாவதற்கு அஞ்சவில்லை. திக்கற்ற என் பெற்ருேர்களை இனி எவர் காப்

பாற்றுவார் என்று நினைத்துக் கஷ்டப்படுகிறேன். நான் அவர்களுக்கு ஒரே சந்ததி. எவனோ சிறுபிள்ளைத் தனமாக இக்காரியத்தைச் செய்துவிட்டானே"

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் அரசன் மருண்டு விட்டான். உடனே அவ்விடம் சென்றான். அங்கு கண்ட காட்சி அரசனின் நெஞ்சைக் கலக்கியது. தவசியின் ஜடை முடியெல்லாம் புழுதி படிந்து தரையில் அலங்கோலமாகக் கிடந்தன. பாலியப் பருவம்; இரத்த வெள்ளத்தில் மூழ்கி யுள்ள ஒரு தேஜோமயமான உருவம்; பக்கத்தில் ஒரு நீர்க் குடம்; மரணவஸ்தையி லிருந்துகொண்டு அச் சிறுவன் அரச குமாரனைப் பார்த்துச் சில வார்த்தைகள் கூறினான்.

"மன்னவனே! என்ன காரியம் செய்துவிட்டாய்! நான் தாகத்தினால் வாடும் என் தாய் தந்தையருக்குத் தண்ணீர் கொணர இங்கு வந்தேன். ஒரே பாணத்தினால் நீ என்னைச் கொன்றுவிட்டாய். இதனால் அவர்கள் இரு வரையும் நீ கொன்றுவிட்டதாகக் கருத வேண்டியிருக் கிறது. ஏனெனில் அவர்கள் கண் பார்வையற்றவர்கள். என்னையே நம்பி வாழ்பவர்கள். தற்சமயம் தாகத்தினால் வாடும் அவர்களுக்கு நீ என்ன செய்தி சொல்லப் போகி றாய்? ஆகா இவ்வுலகில் வேதம் ஓதுவதிலும் தவவாழ்க்கை யிலும் பலன் ஒன்றுமில்லை போலும். நான் தரையில் கிடக்கிறேன். இது எனது தகப்பனாருக்குத் தெரியாமலிருக் கிறது. ஆனால் தெரிந்தும் பயனில்லை. அவரால் எப்படி எனக்கு உதவி செய்ய முடியும்? ஒரு மரம் கீழே விழ இருக்கிறது; அதை மற்றொரு மரம் எப்படித் தடுக்க முடி யும். இனி மேல் ஒன்றும் செய்வதற்கில்லை. கூடிய சீக்கிரம் என் தகப்பனாரிடம் சென்று விஷயத்தைச் சொல்லி விடு. உன் மீது குற்றமில்லை. உன்னை நானோ அவரோ சபிக்கப் போவதில்லை. ஏனெனில் நீ இக் காரியத்தைத்

தெரியாமல் செய்துவிட்டாய். என்மீது உள்ள அம்பை எடுத்து விடு. எனக்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது" என்ருன்.

தசரதன் சிறிது நேரம் யோசித்தான். அம்பை எடுத்தால் உடனே ஆவி போய்விடும்; அதை எடுக்காவிடில் தாங்க முடியாத அவஸ்தை. முனி குமாரனும் இதை ஊகித்து விட்டான். அரசனுக்குத் தைரியம் சொல்லி அம்பை எடுக்கச் சொன்னுன். அம்பையும் எடுத்தாய்விட்டது. முனி குமாரனும் மரணமடைந்தான்.

தசரதன் துக்க வசப்பட்டு ஒருவாறு முனி குமாரனின் தாய் தந்தையை அணுகினுன். அந்தச் சமயத்தில் அவர்கள் இருவரும் தமது குமாரனின் வரவை எதிர்நோக்கிய வண்ணமிருந்தனர். அரசனின் காலடிச் சப்தம் கேட்டவுடன் அம்முனிவர், மகன் தான் வந்துவிட்டான் என்ற உறுதி கொண்டு "மகனே! ஏன் இவ்வளவு தாமதம்? நீ ஒரு வேளை நீரில் விளையாடிக்கொண்டிருப்பாய் என்று உன் தாய் சொன்ருள். சீக்கிரம் நீரைக் கொண்டு வா. நாங்கள் உன்னையே நம்பியுள்ளோம், நாங்கள் ஜீவித்திருப்பதும் உன்ருல் தான். ஏன் பேசாமலிருக்கிருய்? கோபமா?" என்று வினவினுர்.

அரசனுக்கு மனக் கஷ்டம் தாங்க முடியவில்லை. ஒருவாறு சமாதானம் செய்து கொண்டு அவர்களிடம் மெல்ல மெல்ல நடந்த சமாசாரங்களை உள்ளதை உள்ளபடி சொல்லிவிட்டான். அவர்கள் இடி விழுந்தது போல் ஆயினர். துக்கத்திலேயே மூழ்கிவிட்டனர். அரசன் வேண்டுமென்றே வஞ்சித்துக் கொல்லவில்லை. மேலும் உடனே வந்து சமாசாரத்தைச் சொல்லிவிட்டான். இல்லாவிடின் அவர்களின் சாபம் அவன் குலத்தையே நாசம் செய்திருக்கும். பிறகு அவர்கள் தங்களைத் தங்கள்

குமாரன் இருக்குமிடம் கொண்டு போய் விடும்படி விரும்ப, அரசனும் அவர்களை அவ்விடத்திற்கு அழைத்துச் சென்ருன். சடலத்தின் அருகே சென்றதும் கதறிவிட்டனர். "மகனே! ஏன் என்னைக் கண்டதும் வணங்காமலும் பேசாமலும் இருக்கிருய்? ஏன் இவ்வாறு தரையில் படுத்திருக்கிருய்? ஏன் உன் தாயையும் பார்க்காமலிருக்கிருய்? என்னைக் கண்டதும் உடனே ஆலிங்கனம் செய்துகொள்வாயே; ஏன் சும்மா இருக்கிருய்? இனி யார் உன் போல் அனுஷ்டானங்களை நியதி வழுவாமல் செய்துவிட்டு எங்களை தினந்தோறும் விருந்தினரை உபசரிப்பது போல் உபசரிப்பார்? இனி நான் உன் தாயாரை எப்படிக் காப்பாற்ற முடியும்? யமலோகத்திற்கு நான் அல்லவா முன் செல்ல வேண்டும்? தர்ம ராஜனும் தர்மத்தை அவலம்பித்துவிட்டானே! நானும் உன் தாயும் முன் சென்ற பின் அல்லவா நீ அங்கு செல்ல வேண்டும்? எவனே ஒருவன் பாப காரியத்தில் ஈடுபட்டு உன்னைக் கொன்றுவிட்டான்; ஆனல் நீ பாபமற்றவன். உனக்கு மேலான கதி ஏற்படும் என்பதில் ஐயமில்லை. யுத்தத்தில் ஈடுபடும் வில்லாளிகள் பின் வாங்காமல் உயிர் உள்ள வரையிலும் போராடுபவர்கள் அடையும் பதவியை நீ அடைவாய். மேலும் சகரன், திலீபன், ஜனமேஜயன், நகுஷன், துந்துமாறன் முதலிய உத்தமர்கள், தவசிகள், வேதம் ஓதுபவர்கள், பூமிதானம் செய்பவர்கள், வேள்வி புரிபவர்கள் இவர்களுக்கு ஏற்படும் உத்தம கதியும் உனக்கு ஏற்படும். ஒரு தார ஒழுக்கமுடையோர் அடையும் லோகத்திலும் உனக்கு உரிமை உண்டு." என்று சொல்லி வாய்விட்டு அலறினர். பிறகு தன் மனைவியுடன் கூட அவனுக்கு ஈமச்சடங்குகள் செய்து முடித்தார்.

முனி குமாரன் பிரேத சரீரம் நீங்கி திவ்விய தேகத்துடன் சுவர்க்க லோகம் சென்ருன். முனிவரும் எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு அரசனைப் பார்த்து,

"என்னையும் நீ கொன்றுவிடுவது நலம். எனக்குப் புத்திர சோகம் உண்டாகிவிட்டது. ஆனால் நீ அறியாமல் செய்து விட்டாய். உனக்குக் கொலைக் குற்றம் ஏற்படாது. ஆனால் நீ உன் மரணத் தருவாயில் உன் புத்திரனை விட்டுப் பிரிந்து, அதன்மூலம் உயிர் துறப்பாய்'' என்று கூறிவிட்டுத் தனது மனைவியுடன் அக்கினிமீது ஏறி உயிரை நீத்து சுவர்க்க லோகம் சென்றார்.

இக் கதையைச் சொல்லிவிட்டு அரசன் கௌசல்யை யைப் பார்த்து. "அம்மா! விளையாட்டே வினையாகிவிட்டது. ஜீவசத்துகளற்ற உணவை மிதமிஞ்சிப் புசிப்பவனுக்கு இறுதியில் வியாதி ஏற்படுவது போல என்னுடைய கெட்ட காரியம் முடிவில் என்னையே கெடுத்துவிட்டது. முனிவரின் வாக்கியமும் பலிதமாகும் சமயம் நெருங்கிவிட்டது. நானும் புத்திர சோகத்தினால் எமனுலகு செல்கிறேன். என் கண் பார்வை மங்கிவிட்டது. நான் இராமனுக்குத் தீங்கிழைத்துவிட்டேன். இராமனைக் காணுமல் காலனிடம் செல்கிறேன். அவனது தூதுவர்கள் என்னைக் கொண்டு போக அவசரப்படுகின்றனர். சூரிய வெப்பம் நீரை வற்றச் செய்வது போல் என் உயிரை துக்கம் கவர்கிறது. பதினைந்தாவது வருஷம் இராமன் இவ்விடம் திரும்பி வரும் பவனியை நான் பார்க்கப் போவதில்லை. அதை எப்படி வர்ணிப்பது? கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். கேவலம் மானிடர்கள் பார்வையிடத் தகுதியில்லை. விண்ணுலகத்தினர் கண்டு களிக்கக்கூடிய வைபவம். இராமன் அயோத்திக்கு வந்து ஆட்சி செலுத்துவதைக் காண்பவர்களே பாக்கியசாலிகள். கௌசல்யை! எனது இருதயம் உடைந்துகொண்டிருக்கிறது. ஐம்புலன்களும் மறைந்துவிட்டன. அணையும் தீபம் கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து புகைவது போல் இருக்கிறது என் நிலைமை. ஆற்றின் வெள்ளம் கரைகளை உடைத்தெறிவது

போல் என் துக்கம், என்னை அநாதையாக்கி என் புத்தியைக் கெடுத்து எமனுலகம் அனுப்புகிறது. ஆ! ராகவா! எனது ஆபாசத்தை நாசம் செய்பவனே! தகப்பனுக்கு என்றும் களிப்பை உண்டு பண்ணுபவனே! என் நாதனே, என் குமரனே, நீ எங்கே சென்றுவிட்டாய்? ஏ கௌசல்யே! தவத்தில் சிறந்த சுமத்திரையே! நான் நாசமடைகிறேன். குலத்தைக் கெடுத்த கைகேயியே! என் விரோதியே!'' என்றெல்லாம் புலம்பிக்கொண்டு இராமன் தாயார், சுமித்திரை இவர்கள் முன்னிலையில் நடுநிசியில் தனது பிரியமான புத்திரனைக் காட்டிற்கு அனுப்பிய துக்கம் தாங்காமல் தசரத மன்னன் உயிர்விட்டான்.

இவ்வுலகினிலே ஜீவராசிகளுக்குள் ஏற்படும் அன்பையும், ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் அதாவது மனிதனுக்கும் கடவுளுக்கும் ஏற்படும் சம்பந்தத்தையும், காதலன்-காதலியின் பரஸ்பர மோகத்திற்கே ஒப்பிடுவது வழக்கம். ஆனால் இந்த அன்பையும் தாண்டி வேறுவித அன்பு உண்டென்று உறுதிகொள்ள நம் ஆதிகவி வழி காட்டியிருக்கிறார். தகப்பன் தனயன் மீது வைத்த பாசம் உயிரைத் தியாகம் செய்ய வல்ல சக்தியை உள்ளது. இத் தியாகத்தை தசரத மன்னன்தான் செய்ய முடியும். இத் தியாக சரித்திரத்தை வான்மீக மாமுனிவர்தான் திறம்பட விவரிக்க முடியும்.

# வெள்ளக் கட்டுப்பாடு

வெள்ளக் கட்டுப்பாடு பற்றிய பிரச்னைகள் பல வகைப்பட்டவை. நதிகளில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தவோ அல்லது அதன் வேகத்தைக் குறைக்கவோ எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி அபிப்பிராயபேதமேற்படுவதுண்டு. உதாரணமாக, மகாநதியின் அணைக்கரைகள், சினுவிலுள்ள அணைக்கரைகள் ஆகியவை வெள்ளத்தைக் கட்டுப்படுத்தக்கூடியவை என்று ஒரு சாரார் அபிப்பிராயப்பட்டால், மற்றொரு சாராரோ, அந்த அணைக்கரைகள் பந்தோபஸ்து அளிப்பவை அல்ல என்று எண்ணுகிறார்கள். இதே மாதிரி, குறுகிய காலத்துக்கோ நீண்டகாலத்துக்கோ நீரைத் தேக்கிவைக்க நீர்த் தேக்கங்கள் பயன்படுவது பற்றியும் மண் வள பாதுகாப்பு வேலைகள், ஆற்றுப் படுகையிலிருந்து வண்டலை அகற்றுதல், தடுப்புச் சுவர்கள் அமைத்தல் முதலியவைபற்றியும் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

மணற்பாங்கான கரைகளை வெடிவைத்துக் கரைத்துவிட்டு, நீரைப் பரவலாகப் பாயச் செய்யலாம் என்றுகூட யோசனை கூறப்படுகிறது. நதியை ஆழப்படுத்த அணு சக்தியைப் பயன்படுத்தலாம் என்ற யோசனையொன்றும் வெளியாகியிருக்கிறது.

ஆதலால், வெள்ளக் கட்டுப்பாட்டின் பூர்வாங்க விஷயங்களைப்பற்றி அறிந்து நமது கருத்துக்களைத் தெளிவுபடுத்தவேண்டியது அவசியமாகிவிட்டது.

ஆறுகள் எப்பொழுதுமே வண்டல் மண்ணை எடுத்துச் செல்கின்றன; அவற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும்

காலங்களில் இது மேலும் அதிகமாகி விடுகிறது. இந்த வண்டலில் ஒரு பகுதி, வண்டற் படிந்த சமவெளிப் பிரதேசங்களை அமைக்கிறது. மீதியாக விருக்கும் வண்டல், கடலுக்கருகில், கழிமுகப் பிரதேசத்தை விஸ்தரித்துப் பிறகு கடலில் கலந்துவிடுகிறது. நதியை இயற்கையாகவே செல்லும்படி விட்டு விட்டால், அது தனது நீர் மட்டத்தைச் சமப்படுத்த முயலும்போது, தனது போக்கையே மாற்றி விடுகிறது; அதன் கரைகளில் வண்டல் படிந்து. அவை மேடுகளாகும்வரை நதியின்நீர் பாய்ந்து வழிகிறது.

## செயற்கைக் கட்டுக்கரைகள்

செயற்கையாகக் கட்டுக்கரைகளை அமைத்து நதியின் போக்கைக் கட்டுப்படுத்தினுல், நதியின் படுகையில் வண்டல் படிந்து நீர்மட்டம் ஏறுது என்று சிலர் சொல்லுகிறுர்கள். வேறு சிலரோ இக் கருத்தை ஆட்சேபிக்கிறுர்கள். பூகர்ப்ப ரீதியாக ஆராய்ந்ததில். ஒரு காலத்தில், ஹிமாலய மலைத்தொடர்களின் அடிவாரத்தைக் கடலின் அலைகள் வருடிக் கொண்டிருந்தன எனத் தெரியவருகிறது. ஆனுல், கடல், யுகாந்தர காலமாக, நிலத் தோற்றம் ஏற்பட்டதன் விளைவாக படிப்படியாக வடிந்து, கிழக்கில் இப்போது கல்கத்தா இருக்கும் பிரதேசத்தின் தெற்குப் பக்கத்திற்கும், மேற்கில் கராச்சிக்கும் சென்று விட்டது. ஆகவே, கோசி நதி ஹிமாலயத்திலிருந்து உதிக்கும் இடமாகிய சத்ரா, கடல்மட்டத்துக்கு மேல் 340 அடி உயரத்தில்தான் இருக்கிறது. அதே விதம், திப்ருகரில், பிரம்மபுத்ராவின் நீர்மட்டம்340 அடியாகவும் ஹிமாலய அடிவாரத்திலுள்ள தாஜேவாலாவில், ஜமுனுவின் நீர் மட்டம் 850 அடியாகவும் இருக்கிறது.

நதியைப் போன்று இருக்கும் நீர்க்கால், கால்வாய் ஆகும். கால்வாயின் குறுக்களவு ஒரே அளவாக இருக்கும்.

நீர் வழிந்தோடாத வகையில், அதன் கட்டுக் கரைகள் உயரமாக இருக்கும். ஆற்றைக் காட்டிலும், கால்வாயில் ஒழுங்காகவும் ஒரே ரீதியிலும் நீர் செல்லும். கால்வாயின் தலைப்பக்கத்தில் வண்டலைத் தவிர்ப்பதற்கான சாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இவ்வாறாகக் கால்வாய் அமைக்கப்பட்டிருந்தாலும், அதில் வண்டல் படிவதும் அதன்மூலம் பாசன வசதி பெறும் நிலப் பகுதிகளில் வண்டல் படிவதும் உண்டு. ஆகையால் கட்டுக்கரைகள் அமைக்கப்பட்டுள்ள நதிகளிலும் வண்டல் அதிக அளவில் படியுமென்று எதிர்பார்க்கலாம்.

## கட்டுக்கரைகள் மூலம் கிட்டும் பலன்கள்

நல்ல அமைப்புகளுடன் கூடிய கட்டுக்கரைகள், நதி செல்லும் மார்க்கத்தில், தொலைவில் தான் கட்டப்படும். வெள்ளப் பெருக்கின்போதுதான், அவைகள் பயன்படுத்தப்படும். அதுவரை, நதியிலுள்ள வண்டலில் பெரும் பகுதி நீருடன் சேர்ந்து சென்று, கழிமுகப் பிரதேசத்திலும் கடலிலும் படிந்து விடுகிறது. எஞ்சியுள்ள வண்டல் பெரும்பாலும் நதியின் கரையோரங்களில், படிந்துவிடும்; சிறிதளவு கட்டுக்கரைகள் உள்ள பிரதேசங்களில் படிவதும் உண்டு. ஓரளவு வண்டல் நதியின் நீரிலேயே கரைந்து காணப்படும். ஆகையால், கட்டுக்கரைகள் இருப்பதும் இல்லாமலிருப்பதும், ஆற்றுப் படுகையில் வண்டல் படிந்து படுகை உயர்ந்துகொண்டே வருவதைத் தடுப்பதற்குப் பயன்படாமல் போகலாம்.

படுகையில் வண்டலை நிரப்பிப் பிறகு அக்கம்பக்கத்திலுள்ள தாழ்ந்த பிரதேசங்களில் பாயும் தன்மையை மாற்றி, நதியைப் பூராவாகக் கட்டுப்படுத்த முடியாது. ஆனபோதிலும், கட்டுக்கரைகளின் எல்லைக்குட்பட்ட நதிப்

பகுதிகளுக்கும், அந்த எல்லைக்குட்படாத நதிப் பகுதிகளுக்குமிடையே நிலவியுள்ள நீர்மட்ட வித்தியாசத்தைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம், அபாயம் விளைவிக்கக்கூடாத வகையில், நதியை ஓரளவு கட்டுப்படுத்துவது சாத்தியமேயாகும். இம்மாதிரிப்பட்ட நடவடிக்கைகளில், கட்டுக்கரைகளின் எல்லைக்குட்படாத நிலப்பகுதிகளில், திட்டமிட்டு, ஒழுங்கான முறையில் வண்டலைப் படியவைப்பதும் ஒன்ருகும்.

வெள்ள நீரைத் தேக்குவதற்காக வடி நிலப்பகுதிகளை ஒதுக்குவதென்று சீனுவில் சமீபத்தில் உத்தேசிக்கப்பட்டது. அம்முறையும் வெள்ளக் கட்டுப்பாட்டுக்காகப் பின்பற்றக்கூடியதேயாகும்.

இம்மாதிரிப்பட்ட வடிநிலப்பகுதிகளில் வண்டல் கலந்து உபரிநீரை நிரப்பிவைத்து, வெள்ள நெருக்கடி தீர்ந்தபிறகு, அந் நீரை வடியச் செய்வதன்மூலம், இந்த வடிநிலப் பகுதிகளைப் பயன்படுத்தலாம். வெள்ள நெருக்கடி தீரும்வரை, வடிநிலப் பகுதியில் நீர் தேக்கப்பட்டிருக்கும்போது நீர் தெளிவாகி, வண்டல், அப்பகுதியில் படிந்து, நாளடைவில், அப்பகுதி மேடாகிக் கொண்டே வருகிறது. வடி நிலத்தில் ஆழமிருக்காது; ஆகலால் வெள்ள நீரைத் தேக்க அதிகப்பரப்புள்ள வடிநிலப் பகுதி தேவைப்படுகிறது; அத்துடன் அப்பகுதியில் வண்டலும் துரிதமாகப் படிந்துவிடுகிறது. வடிநிலப் பகுதியின் விஸ்தீரணத்துக்கும் வெள்ள நீர் சாதாரணமாகப் பாயக்கூடிய பிரதேசத்தின் மொத்த விஸ்தீரணத்துக்குமிடையே அநேகமாக பெருத்த வேறுபாடு இருக்காது. ஆனபோதிலும், நதி தீரத்தின் பற்பல பகுதிகளில் வெள்ள நீர் தான்ருேன்றித் தனமாகப் பாய்வதைத் தடுத்து, ஒரே பகுதியில்—அந் நீரைத் தேக்குவதற்கு வடிநிலப் பகுதி அமைப்பு பயன்படும். இம்மாதிரிப்பட்ட பகுதியால்,

நமக்கு நீண்டகாலம் பயன்கிட்டாது எனத் தோன்றுகிறது. நில மதிப்பு குறைவுபட்டும், மக்கள் அதிகமாக வாழாத பிரதேசத்திலும்தான், வடிநிலப் பகுதிகளை அமைக்கவேண்டும்.

சாதாரண நீர்த் தேக்கத்துக்கும், வடிநில நீர்த்தேக்கத்துக்குமிடையே அடிப்படையான வேறுபாடுண்டு எனச் சிலர் நினைக்கிறார்கள். இந்நீர்த் தேக்கங்கள் உள்ள ஸ்தலங்கள் எதற்காக, ஏன் இவற்றில் நீர் தேக்கப்படுகிறது, எவ்வளவு காலம் வரை நீர் அவைகளில் தேக்கப்படுகிறது—ஆகியவைபற்றி. இவ்விருவகைப்பட்ட நீர்த் தேக்கங்களிடையே பெருத்த வேறுபாடுகள் உள்ளன. பொதுவாக நதியின் குறுக்களவு ஒடுங்கியுள்ள பிர்தேசத்திலே மலையிடுக்கில் அணை கட்டப்பட்டு, அணைக்குப் பின்புறம் தேக்கப்படும் நீர், பாசனம், மின்சார உற்பத்தி, வெள்ளக் கட்டுப்பாடு—ஆகியவற்றிற்காகப் பயன்படுத்தப்படுகிறது. வடிநில நீர்த்தேக்கங்களிலோ, குறுகிய காலத்துக்கு மட்டும்தான் வெள்ளநீர் தேக்கப்பட்டு, நதியின் நீர் மட்டம் அபாயம் விளைவிக்காத அளவுக்குக் குறைந்த பிறகு, வடிக்கப்பட்டு விடுகிறது. மின்சார உற்பத்திக்கோ, பாசனத்துக்கோ நீர் தேவைப்படாத இடங்களில், சாதாரண நீர் தேக்கத்துக்காக அமைக்கப்பட்டுள்ள அணை, உபரி நீரை வடியவைப்பதற்குப் பயன்படும். வடிநில நீர்த்தேக்கத்திலும் சாதாரண நீர்த்தேக்கத்திலும் வண்டல் படியும் விகிதத்தில் வித்தியாசமிருக்காது.

ஆகையால் வெள்ளக் கட்டுப்பாடு பொறுத்தமட்டில், சாதாரண தேக்கத்துக்கும் வடிநிலத் தேக்கத்துக்குமிடையே பெருத்த வித்தியாசமில்லை. ஆதலால், இவைகளில் எந்தத் தேக்கத்தை அமைப்பது என்பது பொருளாதார நிலைமையைப் பொறுத்ததேயாகும்.

வெள்ளத் தடுப்பு அணைகளின் மேற்புறத்திலுள்ள நீர்ப்பிடி பிரதேசங்களில் மண்வள பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றுவதும் சிறந்ததெனத் தெரியவருகிறது. "ஆற்றுப் படுகையில் வண்டல் படியும் வேகத்தைக் குறைப்பதற்கு அதன் நீர்ப்பிடி பரப்பில் சரியானவாறு பின்பற்றப்படும் மண்வள பாதுகாப்புமுறை பயன்படுவது போல் வேறெதும் பயன்படாது" என்று சமீபகாலம்வரை வன வள இன்ஸ்பெக்டராக இருந்த ஸ்ரீ எம். டி. சதுர்வேதி கூறியிருக்கிறார். ஆனபோதிலும் உறைபனி மிகுந்த கோசி நதி போன்ற நதிகளின் நீர்ப்பிடி பரப்புகளில் மண்வள பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றுவது கஷ்டமான காரியமே. சாகுபடி நிலங்களும் கரடுகளும் உள்ள நீர்ப்பிடி பிரதேசங்களில் மட்டுமே மண்வள பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றவேண்டும்.

மண்வள பாதுகாப்பு முறையை மட்டுமே, வெள்ளக் கட்டுப்பாட்டுக்காக நம்பியிருக்கக்கூடாது. இம்முறை தவிர, இதர வெள்ளக் கட்டுப்பாடு முறைகளையும் பின்பற்றுவது மிகவும் அவசியமாகும்.

வெள்ளத்தால் நிலங்கள், பயிர்கள், இதர பொருள்கள் ஆகியவை சேதமடையாமல் பாதுகாப்பதே நமது நோக்கமாயிருப்பதால் அதாவது நமது நோக்கம் பொருளாதார சுபிட்சமாகையால், முதலீட்டைக் காட்டிலும் பெருத்த அளவில் நமக்குப் பயன் கிட்டக் கூடிய வகையில், நமது வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

# செய்திக் கோவை

## ஆஸ்திரியா விடுதலை

ஐரோப்பாவிலுள்ள ஆஸ்திரியா தேசம் சுமார் பதினேழு வருஷங்களுக்குப் பிறகு விடுதலை பெற்றுச் சுதந்திர நாடாகியது. அந்த நாட்டின் ஜனத்தொகை எழுபது லட்சம். அனைவரும் சுதந்திர நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவில் 1955-ஆம் வருஷம் மே மாதம் பதினைந்தாம் தேதி ருஷ்ய, பிரிட்டிஷ், அமெரிக்க, பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரிகள் ஆதிக்கத்தை ரத்துச் செய்யும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட வெளிநாட்டு மந்திரிகள் ஒவ்வொருவருக்கும் ஒரு தங்கப் பேனா அளிக்கப்பட்டது.

ஆஸ்திரியா தேசம் 1938-ஆம் வருஷம் மார்ச் மாதம் ஜெர்மன் நாஜி கட்சியினரால் ஆக்கிரமிக்கப் பெற்றது. யுத்தத்துக்குப் பின், ருஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் ஆதிக்கத்திலிருந்தது.

ஆஸ்திரியாவின் ஜனாதிபதி தியோடார் கோனெர், தமது நாடு நிரந்தரமாக நடுநிலைமை வகிக்குமென்றும், எந்த இராணுவக் கூட்டிலும் சேராதென்றும் பிரகடனம் செய்தார்.

ராஷ்டிரபதி ராஜேந்திர பிரஸாத் ஆஸ்திரிய ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள செய்தியில், ஆஸ்திரியா சுதந்திர

மடைந்தது குறித்துத் தமது மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் தெரிவித்திருக்கிறார்.

### ஆசிய-ஆப்பிரிக்க மாணவர்

பிரிட்டனில் உள்ள பதினோராயிரம் ஆசிய ஆப்பிரிக்க மாணவர்களின் பிரதிநிதிகள் அடங்கிய முதலாவது மகாநாடு லண்டனில் நடைபெற்றது. தங்களிடையே ஒத்துழைப்பை வளர்க்க, மகாநாட்டினர் ஒரு நிரந்தர ஸ்தாபனத்தை நிறுவினர். கீனியாவில் போரை நிறுத்த பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்றும், மத்திய ஆப்பிரிக்கா பற்றிய கொள்கையை மாற்ற வேண்டும் என்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்தை மகாநாடு கேட்டுக் கொண்டது.

### "ஐஸோகோப்"

ஏழு அங்குல கனமுள்ள எஃகை ஊடுருவிப் பார்க்கக் கூடிய ஒரு புதிய அணு சக்திக் கருவியை அமெரிக்க விஞ்ஞானிகளும், என்ஜினீயர்களும் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதற்கு "ஐஸோகோப்" என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

### பாகிஸ்தான் உருக்கு ஆலை.

வருஷத்துக்கு மூன்றரை லட்சம் டன் கச்சா உருக்கு உற்பத்தி செய்யும் ஆலை யொன்று தொண்ணூறு லட்சம் ரூபாய் செலவில் இவ்வருடம் அமைக்கப் பெறும். மேற்கு ஜெர்மனியில் உள்ள பிரபலமான உருக்குத் தொழிற்சாலை நிபுணர்களான 'குருப்ஸ்' கம்பெனியார் பாகிஸ்தான் உருக்கு ஆலையை நிர்மாணிப்பார்கள்.

### ஆசிய 'வாலிபால்'

ஆசிய 'வாலி பால்' போட்டிப் பந்தயத்தில் இறுதியாக இந்தியா ஜப்பானைத் தோற்கடித்தது.

சூ—மேனன் சம்பாஷணை

சீனப் பிரதமர் சூ-என்-லாயும், ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனனும் பாண்டுங் மகாநாட்டில் சந்தித்துப் பேசினர். அந்தச் சம்பாஷணையைத் தொடர்ந்து நடத்த ஸ்ரீ கிருஷ்ண மேனன் பீகிங் சென்றார். சூ-என்-லாயும் ஸ்ரீ மேனனும் பல முறை சந்தித்துப் பேசினர். பார்மோஸாவைப் பற்றியே முக்கியமாகப் பேசியிருப்பார்கள் என்று ஊகிக்கப் படுகிறது. சீனக் குடியரசுத் தலைவர் மா சே துங்கை ஸ்ரீ மேனன் சந்தித்துப் பேசினார்.

"நாட்டின் ரட்சகர்"

பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் குலாம் முகமதுக்கு 'முகாபிஸ்—ஏ—மில்லத்' (நாட்டின் ரட்சகர்) என்ற பட்டம் அளிக்கப்பட்டிருக்கிறது. பட்டம் பெற அவருக்கு இஷ்டமில்லாவிட்டாலும், மக்களின் நிர்ப்பந்தத்துக்கு இணங்கியுள்ளார் என்று அரசாங்க அறிக்கையொன்று கூறுகிறது. கலவரம், குழப்பம், லஞ்சம், திறமையின்மை போன்ற தீமைகளிலிருந்து நாட்டைக் காப்பாற்றியவர் என்று குலாம் முகமதைப் புகழ்ந்து பல ஸ்தாபனங்கள் அவருக்கு உபசாரப் பத்திரங்கள் வழங்கின.

எகிப்தில் தேசிய பார்லிமெண்ட்

ராணுவப் புரட்சியின் விளைவாக எகிப்தில் பரூக் மன்னர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட பின் ஏற்பட்ட இடைக்கால ராணுவ ஆட்சி அடுத்த வருஷம் ஜனவரி மாதத்துடன் முடிந்து தேசிய பார்லிமெண்டரி ஆட்சி ஏற்படும் என்று பிரதம மந்திரி நாஸர் கூறினார்.

"பார்லிமெண்டரி ஆட்சியில் எல்லாப் பிரிவுகளுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கும். ஆனால் அரசியல் கட்சிகள் இராது. ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், ஏகபோக

உரிமை ஆகியவைகளை ஒழிப்பதும், வலுவுள்ள தேசிய ராணுவம் ஏற்படுத்துவதும், சமூக நியாயம் வழங்குவதும், உண்மையான ஜனநாயக வாழ்வு ஏற்படுத்துவதும் நமது நோக்கங்கள். ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதும் எல்லா நாடுகளையும் விடுவிப்பதும் நமது அயல்நாட்டுக் கொள்கை'' என்று பிரதமர் நாஸர் கூறினார்.

தேசிய பார்லிமெண்ட் தேர்ந்தெடுக்கப்பட்டதாயிருக்குமா அல்லது நியமிக்கப்பட்டதாயிருக்குமா என்று பிரதமர் நாஸர் எதுவும் சொல்லவில்லை.

**பாகிஸ்தான் பஞ்சாப்**

பாகிஸ்தான் பஞ்சாபில் மாலிக் பெரோஜ்கான் நூன் தலைமையில் நிர்வாகம் நடத்தி வந்த மந்திரிசபையை கவர்னர் எம். ஏ. குர்மானி பதவியிலிருந்து நீக்கி விட்டார். முன்னாள் விவசாய மந்திரி சர்தார் அப்துல் ஹமீத் தஸ்தியை புது மந்திரி சபை அமைக்கும்படி கவர்னர் அழைத்திருக்கிறார்.

**யுகோவில் ருஷ்யத் தலைவர்கள்**

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதம காரியதரிசி குருஷ்சேவ் தலைமையில், பிரதம மந்திரி புல்கானின், உதவிப் பிரதம மந்திரி மிக்கோயன் உள்பட ஒரு தூது கோஷ்டி யுகோஸ்லாவியாவின் தலைநகரான பெல்கிரேடில் விமானத்தில் வந்து இறங்கினர். யுகோவின் ஜனதிபதி மார்ஷல் டிட்டோ தூதுகோஷ்டியை விமான நிலயத்தில் வரவேற்றார். விமான நிலயத்தில் இரு தேசங்களின் தேசிய கீதங்களும் ஒலிக்கப் பெற்றன.

1948 ஆம் வருஷத்தில் ருஷ்யா, யுகோஸ்லாவியாவை கம்யூனிஸ்ட் அகிலத்திலிருந்து விலக்கி விட்டுப் பொருளாதார முற்றுகை போட்டது. அதுமுதல் இதுவரை

யுகோஸ்லாவியாவில் ருஷ்ய தேசிய கீதம் ஒலிக்கப்பட்டது மில்லை; ருஷ்யத் தலைவர்களுடன் டிட்டோ கை குலுக்கியது மில்லை.

1948–ஆம் வருஷத்தில் ருஷ்யாவுக்கும் யுகோஸ்லாவியா வுக்கும் இடையே உறவு முறிந்ததற்கு ருஷ்ய ரகசிய போலீஸ் இலாகா மந்திரி (தூக்கிலிடப்பட்ட) பெரியாவே காரணம் என்றும், இரு தேசங்களுக்குமிடையே ஏற்பட்ட முறிவு குறித்துத் தாம் உண்மையிலேயே மிகவும் வருந்து வதாகவும் குருஷ்சேவ் கூறினார்.

**பர்மா அந்நிய உதவிகளை ஏற்காது**

"அந்நிய தேசங்களிடமிருந்து கடன் உதவிகளை பர்மா பெற்றுக் கொள்ளாது. இந்த உதவிகளைப் பெறுவதால் தப்பெண்ணங்கள் தான் பரவும். ஒரு வல்லரசு கோஷ்டி யிடமிருந்து பர்மா கடன் வாங்கினால், மற்ற கோஷ்டி பர்மாவைத் தவறாக எண்ணிவிடக் கூடும். பர்மாவின் 'நடு நிலைமை' கொள்கை காரணமாக வல்லரசு கோஷ்டிகளின் 'தயவுகள்' கிடைக்காமலிருந்தாலும், அக் கொள்கைக்குச் சிறந்த மதிப்பு நிலவுகிறது. உலகின் எந்த தேசத்துட னும் விரோதம் பாராட்டாத கொள்கை அது" என்று பர்மாப் பிரதமர் ஊ நூ இரங்கூனில் கூறினார்.

**பிரிட்டனில் பொதுத் தேர்தல்**

பிரிட்டனில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கன்சர் வேடிவ் கட்சி வெற்றி பெற்றுவிட்டது. மொத்தம் 630 ஸ்தானங்களில் 345 கன்சர்வேடிவ் கட்சிக்கு. தொழிற் கட்சிக்கு 277. கம்யூனிஸ்டுகள் போட்டியிட்ட 13 ஸ்தானங் களிலும் படுதோல்வி அடைந்தனர்.

"தொழிற் கட்சியிலுள்ள வேற்றுமைகள் தான் தோல்விக்குக் காரணம்" என்று தொழில் கட்சித் தலைவர் ஸ்ரீ அட்லி கூறினார்.

கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த சர். அந்தோணி ஈடன் மீண்டும் பிரதம மந்திரியாகத் தொடர்ந்து பதவி வகித்து வருவார்.

## "ஜோதி" வைரம்

பல லட்சக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள உலகப் பிரசித்தமான "ஜோதி" வைரம் கிழக்குப் பாகிஸ்தானில் டாக்காவில் இப்போழுது விற்பனைக்கு வந்திருக்கிறது. நானூறு வருஷங்களுக்கு முன் பாரசீக மன்னர் அதை வைத்திருந்தாராம். பிறகு சீக்கிய மன்னர் ரஞ்சித் சிங்கிடம் அது இருந்ததாகவும், அதன் பின் இப்போது அதை வைத்திருக்கும் டாக்காவிலுள்ள பிரபல முஸ்லீம் ராஜ குடும்பத்தினரின் கைக்கு அது மாறியதாகவும் கூறப் படுகிறது.

## ரயில் தொழிலாளர் வேலை நிறுத்தம்

பிரிட்டனில் ரயில் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். ஆறு துறைமுகங்களில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். பிரிட்டனில் சுமார் இருபதாயிரம் மைல் நீள முள்ள ரயில் பாதை இருக்கிறது. ரயில் தொழிலாளரின் எண்ணிக்கை சுமார் எழுபதாயிரம்.

## டுனிஷியாவுக்கு இரட்டை ஆட்சி

பிரெஞ்சு ஆதிக்கத்திலுள்ள டுனிஷியாவுக்கு உள் நாட்டு சுயாட்சி வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் பிரெஞ்சுப் பிரதமர் ஸ்ரீ எட்வர்ட் பாரியும், டுனிஷியப் பிரதமர் ஸ்ரீ தஹர் பென் அம்மரும் கையொப்ப மிட்டனர். இந்த ஒப்பந்தப்படி டுனிஷிய சட்டசபை நாட்டை ஆளும். ஆனால் நாட்டின் தற்காப்புப் பொறுப்பும் அயல் நாட்டு விவகாரமும் பிரான்சின் அதிகாரத்திலிருந்து வரும்.

## 12 நாளில் 8240 மைல்

ஜெர்ரி ஜோவட், காலின் வில்ஸன் வார்டல் என்ற இரண்டு ஐரோப்பிய இளைஞர்கள் லண்டனிலிருந்து கல்கத்தாவுக்கு 12 நாளில் காரில் வந்து சேர்ந்தனர். பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரியா, யுகோஸ்லாவியா, கிரீஸ், துருக்கி, சிரியா, ஜோர்டான், ஈரான், பாகிஸ்தான் வழியாக இந்தியா வந்ததாகவும், தினந்தோறும் 600 முதல் 800 மைல் வரை பிரயாணம் செய்ததாகவும், இருவரும் மாற்றி மாற்றி கார் ஓட்டியதாகவும், மொத்த தூரம் 8240 மைல் என்றும் இவர்கள் கூறினர்.

## நிறபேதம் ஒழிய வேண்டும்

பள்ளிகளில் வெள்ளைக்காரக் குழந்தைகளையும் நீக்ரோக் குழந்தைகளையும் தனியாக ஒதுக்கி வைக்கும் முறை கூடிய சீக்கிரமே ஒழிய வேண்டும் என்று அமெரிக்காவின் உயர் நீதி மன்றம் (சுப்ரீம் கோர்ட்) உத்தரவிட்டுள்ளது.

## இலங்கைப் பொதுத் தேர்தல்

1957 ஆம் வருஷம் இலங்கையில் பொதுத் தேர்தல் நடைபெறுமென்றும், பிரஜா உரிமை பெற்ற இலங்கை இந்தியருக்கும் நான்கு ஸ்தானங்கள் ஒதுக்கப் பெறும் என்றும் இலங்கைப் பிரதமர் ஸ்ரீ கொத்தலாவலை தெரிவித்தார்.

## கிழக்கு வங்காளத்தில்

பாகிஸ்தானைச் சேர்ந்த கிழக்கு வங்காளத்தில் ஒரு வருஷமாக கவர்னர் ஆட்சி நடந்து வந்தது. கவர்னர் ஆட்சியை உடனடியாக ரத்துச் செய்து, லண்டனிலிருக்கும் பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் குலாம் முகமது ஒரு பிரகடனம் வெளியிட்டார்.

தம்மைக் கலந்தாலோசிக்காமல் கவர்னர் ஆட்சி முடிந்து விடும் என பாகிஸ்தான் பிரதம மந்திரி ஸ்ரீ முகமதலி அறிவித்ததை ஆட்சேபித்து கவர்னர் ஷஹாபுதீன் தமது பதவியை ராஜிநாமாச் செய்தார்.

டாக்காவில் ஸ்ரீ முகமதலி பஸ்லுல் ஹக்கை அரசாங்க மாளிகைக்கு அழைத்து புது மந்திரி சபை அமைப்பது சம்பந்தமாகப் பேசினர். பஸ்லுல் ஹக்கின் பிரதிநிதி அபு ஹுசேன் சர்க்கார் தலைமையில் ஐந்து பேர் கொண்ட ஐக்கிய முன்னணி மந்திரி சபை பதவி ஏற்றது.

## நேருவின் ருஷ்யப் பிரயாணம்

பண்டித ஜவாஹர்லால் நேரு அஜந்தா ராணி என்ற விமானத்தில் ஜூன் மாதம் ஐந்தாம் தேதி பம்பாயிலிருந்து பிரயாணமானர். "இந்திய மக்களின் நல்லாசியுடனும் வாழ்த்துக்களுடனும் நான் செல்லுகிறேன்" என்று நேரு கூறினர்.

நேருவின் "இந்திய தரிசனம்" என்ற புத்தகம் ருஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப் பெற்றது. நேருவைத் தலைசிறந்த ராஜதந்திரி என்று மாஸ்கோ ரேடியோ பாராட்டியது.

செல்லும் வழியில் பண்டித நேரு கெய்ரோவில் எகிப்திய பிரதம மந்திரி நாஸருடன் சம்பாஷித்தார்.

ஜூன் மாதம் ஆறும் தேதி, செக்கோஸ்லோவேகியாவின் தலைநகரான பிராஹாவை அடைந்தார். அந்த நாட்டின் பிரதம மந்திரி ஸ்ரீ ஸிரோகியும், கம்யூனிஸ்டு கட்சி அங்கத்தினர்களும் நேருவை விமான நிலையத்தில் வரவேற்றனர்.

ஜூன் மாதம் ஏழாந் தேதி ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு விசேஷ சோவியத் விமானத்தில் பிராஹாவிலிருந்து

மாஸ்கோ வந்து சேர்ந்தார். ருஷ்யப் பிரதமர் மார்ஷல் புல்கானின், அயல்நாட்டு மந்திரி மாலடோவ் ருஷ்ய கம்யூனிஸ்டு கட்சி முதல் காரியதரிசி குருஷ்சேவ் முதலியோர் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

நேருவும், மார்ஷல் புல்கானினும் திறந்த மோட்டாரில் சென்ற பொழுது, வழியில் அணி அணியாக மக்கள் நின்று மலர் தூவி வாழ்த்தினர்.

ஆரம்பத்தில் ஸ்ரீ நேரு தமது புதல்வி இந்திரா காந்தியுடன் லெனின், ஸ்டாலின் சமாதிக்குச் சென்று மரியாதை செய்தார்.

அயல் நாட்டு மந்திரி ஸ்ரீ மாலடோவ் நேருவைக் கௌரவிக்க ஒரு விருந்து நடத்தினர்.

ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தும் வகையில் ஸ்ரீ நேரு கிரெம்ளின் மாளிகையில் ருஷ்ய ஜனாதிபதி வரோஷிலாவைச் சந்தித்தார்.

ருஷ்யாவில் உள்ள இந்திய அரசாங்கப் பிரதிநிதி ஸ்ரீ கே. பி. எஸ். மேனன் அளித்த விருந்தில், ருஷ்ய ஜனாதிபதியும், பிரதம மந்திரியும் மற்றும் எல்லா மந்திரிகளும் கலந்து கொண்டனர்.

சோவியத் ருஷ்யாவிலேயே மிகப் பெரியதான ஸ்டாலின் மோட்டார் தொழிற்சாலைக்கு நேரு விஜயம் செய்தார்.

ருஷ்யப் பிரதமர் புல்கானின் அளித்த விருந்தில் பேசுகையில் இந்தியா ராணுவ பலம் படைத்ததல்ல எனினும் தார்மிக பலம் வாய்ந்தது என்று நேரு கூறினர்.

நேரு ஸ்டாலின்கிராட் நகரத்துக்கு விஜயம் செய்த போது மக்கள் மிக உற்சாகத்தோடு வரவேற்றனர்.

பின்னர் நேரு ஸிம்பரபோல் நகர் சென்ற பொழுது அங்கும் உற்சாகமாக வரவேற்றனர். சோவியத் யூனியனின் தென் மேற்கிலுள்ள சுதந்திரக் குடியரசான கிரீமியாவின் தலை நகர் ஸிம்பரபோல்.

ஸிம்பரபோவிலிருந்து ஜார்ஜியா குடியரசின் தலைநகரான டிபிலிஸிக்கு நேரு சென்றபொழுது மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். பிரசித்தி பெற்ற யால்டா நகருக்கும் ஸ்ரீ நேரு சென்றார்.

### பிரிட்டிஷ் ஹைகமிஷனர்

தென் கிழக்கு ஆசியாவில் பிரிட்டிஷ் ஹைகமிஷனராக இருக்கும் ஸர். மால்கம் மக்டொனல்ட் இந்தியாவில் அடுத்த பிரிட்டிஷ் ஹைகமிஷனராக நியமிக்கப் பெற்றுள்ளார். இவர் செப்டம்பர் முதல் வாரத்தில் தமது புதுப் பதவியை ஏற்பார்.

### இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத் துறையின் அபிவிருத்திக்காக 650 கோடி ரூபாய் செலவாகும்.

ஒவ்வொருவரும் இப்பொழுது தினசரி உண்ணும் உணவில் உள்ள கலோரிகளின் அளவு 1800. இதை 2250 ஆக்கவும், இப்பொழுது ஒவ்வொருவருக்கும் 15 கெஜம் துணி வீதம் கிடைப்பதை இருபது கெஜம் ஆக்கவும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முயற்சிக்கும்.

### ஈரோடு--சாம்ராஜ நகர்

மைசூரைச் சேர்ந்த சாமராஜ நகரத்துக்கும் ஈரோட்டுக்கும் இடையே சத்தியமங்கலம், கோபிசெட்டிபாளையம் வழியாக ரயில் பாதை போடும் விஷயத்தைப் பற்றி இந்திய

அரசாங்கம் அநுகூலமாக பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது என்று சென்னை கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா கூறினார்.

### கோவா சத்தியாக்கிரகம்

சத்தியாக்கிரகம் செய்ய கோவாவுக்குள் நுழைந்த சத்தியாக்கிரகிகள் மீது போர்த்துகீசிய போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். மகாராஷ்டிர பிரஜா சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் ஸ்ரீ என். ஜி. கோரே, எழுபத்தைந்து வயதான மாஜி புரட்சி வீரர் 'சேனாபதி' பாபத் ஆகியவர்களின் தலைமையில் 54 பேர் கொண்ட சத்தியாக்கிரகக் கோஷ்டி கோவாவுக்குள் நுழைந்தது.

### குழந்தைகளுக்குத் திரைப்படம்

குழந்தைகளுக்கான திரைப்படங்கள் தயாரிப்பதற்காக டில்லியில் ஒரு ஸ்தாபனம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதன் நிர்வாகக் குழுவின் தலைவர் பண்டித குன்ஸ்ரூ. உப தலைவர் ஸ்ரீ பி. ஜி. கேர். ஸ்ரீ வி. சாந்தாராம், ஸ்ரீ கே. சுப்பிரமண்யம், ஸ்ரீமதி நல்லமுத்து ராமமூர்த்தி முதலியோர் உறுப்பினர்.

### ஏழைகளுக்கு இலவசக் கல்வி

இந்த ஆண்டு ஜூன் மாத முதல், ஆரம்ப மத்திய பள்ளிகளில் படிக்கும் ஏழைக் குழந்தைகளுக்கு மூன்றுவது பாரம் வரை சம்பள விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று சென்னை அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. குழந்தைகளின் பெற்றோர்களுக்கோ அல்லது 'கார்டியன்'களுக்கோ, எல்லா இனங்களிலிருந்தும் கிடைக்கும் மொத்த வருமானம் ஆண்டுக்கு ஆயிரத்து இருநூறு ரூபாய்க்குக் குறைவாக இருந்தால் அவர்கள் குழந்தைகளுக்கு சம்பள விலக்கு அளிக்கப்படும்.

### சென்னை மின்சார விஸ்தரிப்பு

சென்னை ராஜ்யத்தில் மின்சார வசதிகளை விஸ்தரிப்பதற்காக இந்திய அரசாங்கம் இவ்வருஷத்தில் அறுபத்து நான்கு லட்ச ரூபாய் கடனுகக் கொடுக்க இசைந்துள்ளது.

### தசாம்ச நாணய முறை

தசாம்ச நாணய முறையைப் புழக்கத்துக்குக் கொண்டு வர இதுவே ஏற்ற தருணம் என்று இந்திய அரசாங்கம் கருதுவதாக நிதிமந்திரி ஸ்ரீ சி. டி. தேஷ்முக் கூறினர். 1870ல் வருஷத்திலேயே இம்முறை இலங்கையில் அமுலுக்கு வந்துவிட்டதாகவும், அங்கு தசாம்ச நாணயப் புழக்கம் வெற்றியளித்துள்ளதென்றும் அவர் கூறினர்.

### அடுத்த காங்கிரஸ்

இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் அடுத்த மகாநாடு, ஜனவரி மாத மத்தியில் அமிருதசரஸில் நடைபெறும்.

### என். எம். ஜோஷி

• இந்தியத் தொழிற்சங்க இயக்கத்தின் பிதாவான ஸ்ரீ என். எம். ஜோஷி தமது எழுபத்தைந்தாவது வயதில் பம்பாயில் காலமானர்.

### ரயில் வசதிகள்

ரயில் வண்டியின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்கு நடந்து செல்லக் கூடிய வகையில் அமைந்த இரண்டு ஜனதா ரயில்கள் சில மாதங்களில் இந்திய ரயில் பாதைகளில் விடப்படும். மூன்ருவது வகுப்புப் பிரயாணிகளின் சௌகரியத்தைக் கவனித்துக் கொள்ள இந்த வண்டிகளில் கண்டக்டர்கள் நியமிக்கப் பெறுவார்கள்.

ரயில் நிலையம் பெரியதா, அந்தஸ்துள்ளதா என்பதைக் கவனிக்காமல் எல்லா நிலையங்களிலும் பிரயாணிகளுக்கு சௌகரியங்கள் செய்து கொடுப்பதென்று முடிவு செய்யப் பட்டுள்ளது. ஒவ்வொரு ஸ்டேஷனிலும் டெலிபோன் வசதியும் மின்சார வசதியும் செய்து தரப்படும். பழைய ரயில் பெட்டிகளில் முப்பதாயிரம் மின்சார விசிறிகளுக்கு மேல் பொருத்தப்பட்டுள்ளன. புதிதாகக் கட்டப் பெறும் வண்டிகளுக்கு மின்சார விசிறிகள் ஏற்கெனவே உள்ளன.

ரயில் வண்டிகளில் உணவு வசதிகள் பிரதேசத்துக்கு ஏற்றவாறும் மலிவாகவும் நிர்ணயிக்கப் பெறும்.

நாட்டின் முக்கிய ரயில் நிலையங்களில் ரயிலுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் பிரயாணிகள் சௌகரியத்துக்காகத் திரைப்படக் காட்சி ஏற்பாடு செய்யப் படும். இதில் செய்திப் படங்கள் காட்டுவார்கள்.

இத்தகவல்களை இந்திய அரசாங்க ரயில்வே மந்திரி ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி கூறினார்.

**பிலாய் உருக்கு ஆலை**

பிலாயில் உருக்கு ஆலை நிறுவுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்து முடிக்கும்பொருட்டு ஆறு ருஷ்ய உருக்கு நிபுணர்கள் கோஷ்டி இந்தியாவுக்கு வந்திருக்கின்றனர். இந்தக் கோஷ்டியின் தலைவர் ருஷ்யப் பிரதம என்ஜினீயர் ஸ்ரீ கிராடென்கோ.

**காந்தியடிகளின் நூல்கள்**

காந்தியடிகள் எழுதிய நூல்கள் அனைத்தையும் தமிழில் புத்தகமாக சுமார் பத்து பாகங்களில் வெளியிட காந்தி ஸ்மாரக் நிதி அங்கீகாரமளித்திருப்பதாக ஸ்ரீ தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அறிவித்தார். இப்

புத்தகங்களை காந்தி நினைவு நிதி ஸ்தாபன தமிழ்நாடு கிளை வெளியிடும்.

### ஹிந்தி கமிஷன்

இந்திய அரசாங்கத்தில் அரசாங்க காரியங்களுக்காக ஹிந்தி மொழியை உபயோகிப்பது சம்பந்தமாக, ராஷ்டிர பதிக்கு ஆலோசனை கூ.ற ஸ்ரீ பி. ஜி. கேர் தலைமையில் இருபது அங்கத்தினர் கொண்ட ஹிந்தி கமிஷன் ஒன்றை இந்திய அரசாங்கம் நியமித்திருக்கிறது. இந்த இருபது அங்கத்தினர்களில் டாக்டர். ப. சுப்பராயன், ஸ்ரீ எம். சத்திய நாராயணு, லோகசபை உதவி சபாநாயகர் ஸ்ரீ எம். அனந்த சயனம் ஐயங்கார், எர்ணுகுளம் 'தினபந்து' ஆசிரியர் ஸ்ரீ எம். கே. ராஜா முதலியோரும் இருக்கின்றனர்.

### பெரிய "காங்க்ரீட்" பாலம்

செங்கற்பட்டுக்கு அருகே, சென்னை--திண்டுக்கல் சாலையில் பாலாற்றில் பெரிய காங்க்ரீட் பாலம் ஒன்றை சுமார் இருபத்தாறு லட்ச ரூபாய் செலவில் அமைத்திருக்கின்றனர். இப்பாலத்தின் நீளம் 2202 அடி. இது ஆசியாவிலேயே மிகப் பெரிய காங்க்ரீட் பாலம் என்றும், உலகத்தில் இது இரண்டாவது பெரிய காங்க்ரீட் பாலம் என்றும் சொல்லப்படுகிறது.

# அமெரிக்காவில் சமயப் பற்று

ஐஸன்ஹாவர் ஜினீவா மகாநாட்டுக்குக் கிளம்பிய இரவு, சமாதானம் நிலைக்கப் பிரார்த்தனை நடத்துமாறு அமெரிக்கருக்கு வேண்டுகோள் விடுத்தார். இதற்கிணங்க அமெரிக்க நாட்டில் எங்கும் கிறிஸ்தவக் கோயில்களில் மக்கள் குழுமி பிரார்த்தனைகளில் ஈடுபட்டது அமெரிக்க மக்களின் மத நம்பிக்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது.

தற்பொழுது அமெரிக்காவில் 60 சத விகிதம் திருச்சபை அங்கத்தினராக இருக்கின்றனர். 1940-ல் 49 சத விகிதமும் 1947-ல் 52 சத விகிதமுமாக இருந்தது உயர்ந்து கொண்டே வருகின்றது. மத சம்பந்தமான நூல்கள் நன்கு விற்பனையாகின்றன. கோயில்கள் பெருவாரியாகக் கட்டப்படுகின்றன.

இந்த சமய மறுமலர்ச்சி பற்றி நிதானமாகவும் கவனமாகவும் ஓர் ஆராய்ச்சி நடைபெற்றது. அமெரிக்காவில் மதம் இவ்வாறு விரிவான முறையில் பெருகுவதைப் பற்றி குருமார்களிடையே கருத்து வேற்றுமை இருந்து வருவதாகவும் இத்தகைய மத ஆர்வத்தில் அவர்கள் எல்லோரும் ஒருமிக்க மகிழ்ச்சியடையவில்லை என்றும் அந்த ஆராய்ச்சியால் தெரியவருகின்றது. "மன சமாதானம்" என்ற முறையில் பொதுமக்கள் மதத்தைக் கருதுவது மத குருமார்களில் பலருக்குப் பிடிப்பதில்லை. உண்மையான நம்பிக்கை, விசுவாசம் இவற்றுக்குப் பதிலாக நாகரிக வாழ்க்கையின் கஷ்டங்களிலிருந்து விடுதலை பெறுவதைத்தான்

சமீபத்தில் மதத்தில் அக்கறை கொண்டவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என சிலர் நினைக்கின்றனர். ஆயினும் தேசிய கிறிஸ்தவக் கோயில்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அது ஆத்மீக வளர்ச்சியைத் தான் குறிப்பிடுகிறது என நினைக்கின்றனர்.

இன்றைய சமுதாயத்தில் ஒரு புது நிலையை அடைவதற்காக கிறிஸ்தவக் கோயில்கள் முயற்சி செய்து வருகின்றன என்பது இவ்வாராய்ச்சிமூலம் தெளிவாகும் உண்மைகளில் ஒன்றாகும். அமெரிக்கர் வாழ்க்கையில் இப்பொழுது அவைகளுக்கு இருக்கும் மதிப்பும் அந்தஸ்தும் முன் இருந்ததை விட வித்தியாசப்பட்டதாகும்.

கிறிஸ்தவக் கோயில்களிலும், மதத்திலும் தொழிற் சங்கங்கள் நல்ல அக்கறை எடுத்துக்கொள்ள ஆரம்பித்துள்ளன. தொழிற்சங்கக் காங்கிரஸ் சமீபத்தில் தேசிய கிறிஸ்தவக் கோயில்கள் சங்கத்துக்கு 2 லக்ஷம் டாலர் நிதி உதவியளித்துள்ளது. இந்நிதியின் தொகையை விட இதனை அளித்த நோக்கம்தான் முக்கியமாகக் கவனிக்க வேண்டியதாகும். பொருளாதாரச் சூழ்நிலைக்குத் தக்கவாறு சமயக் கொள்கைகளைப் பயன்படுத்துவதுதான் இதன் நோக்கமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதாரத்துக்கும் மதத்துக்கும் உறவு இருப்பதைப் பல தொழிற்சங்கங்களும் வியாபாரக் குழுக்களும் ஆராய்ச்சி செய்துவருகின்றன.

## பொருளாதார அபிவிருத்தியும் குறையவில்லை

இன்றைய மக்களின் பிரச்னைகளுக்கு ஆத்மீக முறையில் தீர்வு காண மதகுருமார் செய்யும் முயற்சிக்கு மக்களிடையே காணும் மத நம்பிக்கை வளர்ச்சி ஓர் உதாரணமாகுமென்றும் தெரியவருகிறது. இது உண்மையென்றால்

அமெரிக்க மக்கள் கோவில்களுக்குச் செல்வது மனத் திருப்திக்காக மட்டுமல்லாமல் உண்மையான ஆத்மீக வளர்ச்சிக்குமாகத் தான் என்ருகும்.

யுத்தம் முடிந்த பிறகு மக்களிடையே காணும் மத நம்பிக்கை வளர்ச்சியும் பொருளாதார அபிவிருத்தியும் ஒருங்கே அமைந்திருப்பதும் இக் கருத்துக்கு ஆக்கமளிக்கின்றது. வாழ்க்கைக் கஷ்டங்கள் இல்லாமலிருக்கும் பொழுது மக்கள் பொருளாதார மேன்மையை வெகுவாகப் பாராட்டுவது சகஜம். ஆனல் இப்பொழுது பொருளாதார வசதிகள் அதிகமாக இருப்பினும் அமெரிக்க மக்கள் ஆத்மீகத் துறையைப் புறக்கணிக்கவில்லை.

இத்தகைய விஷயங்களில் உள்நோக்கத்திலிருந்து செய்கைகளைப் பிரித்து அறிவது சிரமமான காரியமாகும். எனினும் இப்பொழுது அமெரிக்க மக்களிடையே வளர்ந்து வரும் சமயப் பற்று வெறும் சௌகரிய மத நம்பிக்கையை நாடியதல்ல என்பது புலனுகிறது.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at
Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18

தி

# நியூ கார்டியன் ஆப் இந்தியா

## லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(ஸ்தாபிதம் 1934)

மற்றொரு மகத்தான வெற்றி!

**1954-ம் ஆண்டில் முன்னேற்றம்!**

| | |
|---|---|
| புதிய பிரபோசல்கள் | ரூ. **107** லட்சத்துக்கு மேல் |
| பூர்த்தி செய்த வியாபாரம் | ரூ. **90** லட்சத்துக்கு மேல் |
| அமுலிலுள்ள மொத்த அஷ்யூரன்ஸ் | ரூ. **380** லட்சத்துக்கு மேல் |
| ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிதி | ரூ. **87** லட்சத்துக்கு மேல் |

கம்பெனி பாலிஸிதாரர்களின் நலனுக்காக மிகத் திடமான அடிப்படையில் ரிஸர்வ்களை வைத்திருக்கிறது.

கம்பெனியின் செல்வாக்குக்கு முக்கிய காரணம், சரளமான பாலிஸி நிபந்தனைகளும், கணிசமான போனசும், உரிமைகளுக்கு உடனுக்குடன் பணம் கொடுப்பதுமே யாகும்.

முன்னேற்றமான இக் கம்பெனியில் ஒரு பாலிஸி எடுப்பது ஒரு நல்ல ஆஸ்தி; இக் கம்பெனியில் ஏஜன்ஸி எடுப்பது பயனுள்ள வியாபாரத் தொடர்பு.

**தி நியூ கார்டியன் ஆப் இந்தியா**

**லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

தலைமைக்காரியாலயம் : யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்

எஸ்பிளனேட் — சென்னை 1

KUMARI MALAR REGD. NO. M. 46

புதிய பிரயாண நூல்

# மலேயா முதல் கானடா வரை

'உலகம் சுற்றும் தமிழன்'
ஏ. கே. செட்டியார்
எழுதியது

மலேயா, சிங்கப்பூர், இந்தோனேஷியா—ஜாவா, பாலி, சுமத்ரா—, ஆஸ்திரேலியா, பீஜித் தீவுகள், கானடா முதலிய நாடுகளில் பிரயாண அனுபவங்கள்.

விலை ரூபாய் ஐந்து